Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 116 | திங்கட்கிழமை | பங்குனி 9 ஆம் நாள் 22 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 16 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## விபத்தில் சிக்கியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22
கிளிநொச்சி, உமையாள்புரத்தில் நடந்த விபத்தில் காயம 06 >

# இலங்கைக்கெதிரான பிரேரணை ஜெனிவாவில் இன்று சமர்ப்பிப்பு!

- அரசின் வியூகங்கள் தவிடுபொடி
- இன்று அல்லது நாளை வாக்கெடுப்பு
- தீர்மானம் நிறைவேறுவது உறுதி

ஜெனிவா, மார்ச் 22
ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான தீர்மான வரைவு இன்று விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அதைத் தொடர்ந்து அதன் மீதான வாக்கெடுப்பு இன்று அல்லது நாளை நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 15 >

## ஐ.நா. தீர்மான வரைவை இந்தியா எதிர்க்கக்கூடாது!

### தமிழகத் தலைவர்கள் போர்க்கொடி

சென்னை, மார்ச் 22
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக முன்வைக் கப்பட்டுள்ள தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவு வழங்கவேண்டும் என்று தமிழகத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் 15 >



## கச்சதீவு எங்கள் சொத்து இந்தியாவுக்கு கொடோம்

### விமல் சீற்றம்

கொழும்பு, மார்ச் 22
யாழ்ப்பாணத்துக்கு அருகிலுள்ள கச்சதீவு இலங்கைக்கே சொந்தமானது. கச்சதீவு ஒப்பந்தத்தில் 15 >

## காலம் செய்த சதி

கொழும்பு, மார்ச் 22
பசறையில் நேற்றுமுன்தினம் நடந்த பஸ் விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதி சோகமய 15 >

## முன்னறிவிப்பு ஏதுமின்றி திடீர் சுற்றிவளைப்புகள்!

### அமைச்சர் சரத் வீரசேகர தகவல்

கொழும்பு, மார்ச் 22
நாட்டின் பல பாகங்களிலும், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இராணுவத்தினர் திடீர் சுற்றிவளைப்பு நடவ 15 >

## ஆட்சி மாற்றத்தால் நாட்டுக்கு ஆபத்து!

### சந்திரிகா குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 22
சர்வதேச மட்டத்தில் இலங்கை தற்போது பேராபத்தை எதிர்கொண்டுள்ளது. இதற்கு இங்கு ஏற்பட்ட ஆட்சி மாற் 15 >

## சபுகஸ்கந்தவில் புதிய கொத்தணி

**எண்ணெய் சுத்திகரிப்பு பணியாளர்கள் 474 பேருக்கு தொற்று**

கொழும்பு, மார்ச் 22
சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் பணியாற்றும் 474 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அங்கு பணியாற்றும் ஆயிரத்து 200 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட 06 >

## ஊடக சுதந்திரம் இல்லையேல் எதேச்சதிகாரம் தலைதூக்கும்

### கோத்தாபயவுக்கு சஜித் அறிவுரை

கொழும்பு, மார்ச் 22
ஊடகங்களை ஒடுக்குவதற்கான உரிமை அரசியல்வாதிகளுக்கு கிடையாது. ஊடக சுதந்திரம் மறுக் 15 >

## மனச்சாட்சி இருக்கும் நாடுகள் பிரேரணையைத் தோற்கடிக்கும்

### கூறுகிறது இலங்கை அரசு

கொழும்பு, மார்ச் 22
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கை மீது கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணை மனச்சாட்சிக்கு விரோதமானது. எமது நாட்டை ஏதோவொரு வகையில் பழிவாங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. 06 >

## வீட்டு வர்ணம் பூச வந்தவரால் தொற்றியது கொரோனா வைரஸ்

### வடக்கில் நேற்று 14 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், மார்ச் 22
வடக்கு மாகாணத்தில் நேற்று 14 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். 06 >

## பொலிஸாரைத் தள்ளிவிட்டு ஓடிய சகோதரர்கள் கைது!


யாழ்ப்பாணம், மார்ச் 22
யாழ்ப்பாணம், திருநகரில் குடும்பங்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாட்டை விசாரணை செய்யச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களை தள்ளிவிட்டு இருவர் தப்பியோடிய 15 >

## "பொ-பொ" வழக்குக்காக யாழ். வருகிறார் ரோஹண!

யாழ்ப்பாணம், மார்ச் 22
"பொத்துவில் முதல் பொலிகண்டி வரை" பேரணியில் பங்கேற்றவர்கள் மீது பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள "பி" அறிக்கைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரம் இன்று பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ள நிலையில், பொலிஸார் சார்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண நீதிமன்றில் முன் 15 >

# தமிழரின் நில மீட்புப் போராட்டத்துக்கு சர்வதேசமும் ஆதரவு வழங்கவேண்டும்

## விக்னேஸ்வரன் எம்.பி அறைகூவல்



யாழ்ப்பாணம், மார்ச் 22


**வடக்கும் கிழக்கும் எமது பாரம்பரிய பிரதேசங்கள். வடக்கும் கிழக்கும் எமது தாயகம். எமது இந்த தாயக நிலம் எம்மிடம் இருந்து அபகரிக்கப்படுவது என்பது எமது இனம் அழிக்கப்படுவதற்கு சமனானது. ஆகவேதான் நில அபகரிப்பு ஒரு இனப்படுகொலை ஆகின்றது. எமது இந்த நில மீட்பு போராட்டத்துக்கு சர்வதேச சமூகம் எல்லாவகையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

வடக்கு கிழக்கு நில ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்கான வழிவகைகளை ஆராயும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இணையவழி மாநாட்டில் இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

1970 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஆயுதப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்துவரும், கிழக்கு மாகாணத்தின் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி நிலம் எம்மிடம் இருந்து பறிக்கப்பட்டுவிட்டது. எமக்கு எதிரான இந்த நில ஆக்கிரமிப்பு என்பது சத்தம் இன்றி எமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் ஒரு பெரும் போராக இன்று மாறியிருக்கிறது. நிலம் மட்டுமன்றி, நிலத்துடன் சேர்த்து, எமது வாழ்வும், அடையாளமும், வரலாறும் சேர்த்தே அழிக்கப்படுகிறன. இது ஒரு மிகப் பெரும் மனித உரிமை மீறல் ஆகும். அரசுகள் மேற்கொண்ட இந்த மனித உரிமை மீறல்களே தமிழ் மக்கள் தமது நிலத்தையும், வாழ்வையும், அடையாளத்தையும் பாதுகாப்பதற்காக ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு காரணமாக அமைந்தது. ஆயுதப் போராட்டம் 2009ஆம் ஆண்டு ஒரு பெரும் இன அழிப்புடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டபோதிலும், எமக்கு எதிரான நில ஆக்கிரமிப்பு போர் இன்னமும் நிற்கவில்லை. மாறாக, மேலும் தீவிரம் அடைந்துள்ளது. எமது மக்களுக்கு எதிரான போரில் ஈடுபட்ட இராணுவம், வடக்கு கிழக்கில் தற்போது எமது நிலங்களை ஆக்கிரமித்துள்ளது. அபிவிருத்தி, தொல்பொருள் ஆய்வு, காடுகள் ஒதுக்கீடு, வன விலங்குகள் சரணாலயம் மற்றும் பறவைகள் சரணாலயம் என்ற போர்வைகளில் தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களம், வனவிலங்குகள் திணைக்களம், மகாவலி அதிகாரசபை, வனவளத் திணைக்களம் மற்றும் வீடமைப்பு அதிகாரசபை ஆகிய திணைக்களங்கள் உட்பட பல்வேறு அரச திணைக்களங்கள் எமக்கு எதிரான இந்த நில ஆக்கிரமிப்பு போரில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளன. இதனை அண்மையில் அமெரிக்காவின் ஒக்லாந்து நிறுவனம் வெளியிட்ட "முடிவற்ற போர்" என்ற ஆய்வு அறிக்கையில் ஆதாரங்களுடன் வெளியிட்டது.

1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தது முதல் மிகவும் நுட்பமான முறையில், ஒரு இனநாயக நாடாக இலங்கை கட்டமைக்கப்பட்டு வருகின்றது. இந்த உண்மையை புரிந்துகொள்ளாமல் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு சமாதான முயற்சிகளோ, பொறுப்புக்கூறல் முயற்சிகளோ அல்லது நீதிக்கான முயற்சிகளோ வெற்றி அளிக்கப் போவதில்லை. இதனை சர்வதேச சமூகம் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். நில உரிமைகள் மிக முக்கியமான மனித உரிமைகள் ஆகும். ஒரு இனத்தின் அடையாளம், வாழ்வு, செழிப்பு ஆகியவற்றின் உயிர் மூலமாக இருப்பது அந்த இனத்தின் பாரம்பரிய நிலமாகும் - என்றார். (ப)

---



## குரக்கன் அறுவடை விழா

முல்லைத்தீவு, மார்ச் 22

முல்லைத்தீவு விவசாயத் திணைக்களத்தால் குரக்கன் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக வழங்கப்பட்ட குரக்கன் முன்மாதிரி செய்கைத் துண்டத்துக்கான அறுவடை இடம்பெற்றுள்ளது.

துணுக்காய் விவசாய போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட கல்விளானில் அமைந்துள்ள செ.துவாரகன் பயனாளியின் இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த அறுவடை நிகழ்வு இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பு.உகநாதனின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் அடிப்படையில், துணுக்காய் விவசாய போதனாசிரியர் ஜெ.வித்தியாதரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

உள்ளூரில் குரக்கன் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக குரக்கன் செய்கைக்கான பயிரிடல் நுட்பங்களை மக்களிடத்தே கொண்டுசெல்லும் நோக்குடன் இம் முன்மாதிரி துண்டச்செய்கை மேற்கொள்ளப்பட்டு, தற்போது அறுவடை செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ப222)

---

## யாழ். பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் வீரர்கள் தினம்



யாழ்ப்பாணம், மார்ச் 22

157 ஆவது பொலிஸ் வீரர்கள் தின நிகழ்வு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில், யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் தலைமையில் நேற்று இடம் பெற்றது.

யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரால் பொலிஸ் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டு கடமையின் போது உயிரிழந்த பொலிஸாருக்கு 2 நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன், உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் நினைவாக மலர் வளையங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில், யாழ்ப்பாணம் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், யாழ்ப்பாண உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ப)

---

## விபத்து தொடர்பில் அறிக்கை கோரல்

பதுளை.மார்ச் 22

பசறை 13 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்து தொடர்பில், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் முழுமையான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்குமாறு, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை விபத்து இடம்பெற்ற பகுதியில் உள்ள வீதியில், நீண்டகாலமாக அகற்றப்படாமலிருக்கும் பாறையை அகற்றுவதற்கு ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வீதியைப் புனரமைக்கும் பணிகளைப் பொறுப்பேற்றுள்ள தரப்பினர், குறித்தும், விசாரணை மேற்கொள்ள பொலிஸாருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (க-இ)

---

## விபத்தில் உயிரிழந்தவர்களின் இறுதிச் சடங்குக்கு நிதியுதவி

கொழும்பு,மார்ச் 22

பசறையில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தவர்களின், இறுதிச் சடங்குகளுக்காக தலா 55 ஆயிரம் ரூபா வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

ஊவா மாகாண ஆளுநர் அலுவலகம் மற்றும் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை ஆகியவை இணைந்து இந் நிதியுதவியை வழங்கவுள்ளன.

சாரதி வாகனத்தை கவனவீனமாகச் செலுத்தியமையே இந்த விபத்துக்குக் காரணம். விபத்து நடந்த இடத்துக்கு அருகிலிருந்த சுற்றுச்சூழல் சான்றுகளால் சாரதியால் பஸ்ஸைக் கட்டுப்படுத்த முடிய வில்லை என்பது தெளிவாகப் புலப்படுகின்றது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பசறை லுணுகலைப் பகுதியிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் பள்ளத்தில் வீழ்ந்து நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானது. குறித்த பஸ் எதிரே வந்த டிப்பரைக் கடந்து செல்ல முற்பட்டபோது, வீதியை விட்டு விலகி சுமார் 200 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்து நடந்துள்ளது என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. பஸ்ஸின் சாரதியும் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார்.

அதேவேளை டிப்பர் வாகனச்சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பேருந்துச்சாரதியையும் கைது செய்யப்பட்ட டிப்பர் வாகனச் சாரதி.யையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. ஊவா மாகாணத்தில் கடந்த ஒன்றரை வருடத்தில் 30 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-க-இ)

---

## குடும்பத் தலைவர் மாயம்; பொலிஸில் முறைப்பாடு

வவுனியா, மார்ச் 22

வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்ற குடும்பத் தலைவரை கடந்த நான்கு நாள்களாக் காணவில்லை என்று, அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் நேற்று அந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. வவுனியா நகரப்பகுதியில் வசிக்கும் திருநாவுக்கரசு விமலநாதன் என்னும் குடும்பத்தலைவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-12)

## மத்திய வங்கியால் இழப்பீட்டுத் தொகை அதிகரிப்பு

கொழும்பு,மார்ச் 22

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையால், காப்புறுதி மற்றும் திரவத் தன்மை உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அதிகபட்ச இழப்பீட்டுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் ஒழுங்கு முறைப்படுத்தப்படும் நிதி நிறுவனங்களின் வைப்பாளர்களுக்கு, அத்தகைய நிறுவனங்களின் உரிமங்களை இரத்து செய்யும் அல்லது இடை நிறுத்தும் சந்தர்ப்பத்தில் மேலதிக நிவாரணத்தை வழங்குவதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாணயச்சபையால் உரிமங்கள் இரத்து செய்யப்பட்ட அல்லது இடை நிறுத்தி வைக்கப்பட்ட சென்றல் இன்வெஸ்ட் மெண்ட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி (சி.ஐ. எவ்.எல்), த ஸ்ராண்டெட் கிறெடிற் பினான்ஸ் லிமிடெட் (ரி.எஸ்.சி.எவ்.எல்), ரி.கே.எஸ் பினான்ஸ் லிமிடெட் (ரி. கே.எஸ்.எவ்.எல்), த பினான்ஸ் கம்பனி பிஎல்சி (ரி.எவ்.சி), ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட் (ஈ.ரி.ஐ.எவ்.எல்) மற்றும் ஸ்வர்ணமஹால் பினான்சியல் சேர்வீசஸ் பிஎல்சி (எஸ்.எவ்.எஸ்.பி) ஆகிய ஆறு நிதி நிறுவனங்களின் வைப்பாளர்கள் திருத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகையைப் பெறத் தகுதியுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காதவரை அதற்காகப் போராடுவோருக்கு தொடர் பாதிப்பே

### கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, மார்ச் 22**

**சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காதவரை அதற்காகப் போராடுவோர் பாதிக்கப்பட்டுக் கொண்டேயிருப்பர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் விடயம் 8 இன் கீழான வியன்னா பிரகடனம் மற்றும் நடவடிக்கைக்கான திட்டமிடல் பற்றிய பொது விவாதத்தில் இணையவழியில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஒரு மக்கள் கூட்டம் தமது வாழ்வின் பிரிக்க முடியாத உரிமையான சுயநிர்ணய உரிமையை பெற்றிட நியாயமான எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள உரித்துடையவர்கள் என வியன்னா பிரகடனம் மற்றும் நடவடிக்கைக்கான செயற்றிட்டம் வெளிப்படுத்துகிறது.

இலங்கை அரசால் நிகழ்த்தப்பட்ட இன அழிப்பின் மத்தியில், தமிழ்த் தேசமானது தனது சுயநிர்ணய உரிமையை அனுபவிப்பதற்காக போராடிவருகிறது. தமிழர் தாயகத்தின் ஏறத்தாழ 75 வீதமான நிலப்பரப்பானது தமிழீழ விடுதலைப் புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள்ளும் ஆளுகைக்குள்ளும் இருந்த அப்போதைய களநிலை யதார்த்தத்தின் அடிப்படையில், ஈழத் தமிழரின் தேச அந்தஸ்தும் தனித்துவமான இறைமையும் அங்கீகரிக்கப்பட்டு, ஆகக் குறைந்தது இந்த அரசின் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டு ஒரு சமஷ்டி ஆட்சி முறைமை உருவாகுமென்றே எதிர்ப்பார்க்கப்பட்டது.

இதன் மூலமாக ஈற்றில் தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய ஏதுநிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் நடைமுறையில் நிகழ்த்தப்பட்டதோ முற்றிலும் வேறுபட்ட ஒரு நிகழ்வே. இந்த அரசானது, சர்வதேசத்தின் பல்வேறு தரப்புகளின் ஆதரவுடன், இராணுவ நடவடிக்கையையே தமது தீர்வாக முன்வைத்தது. அந்த இராணுவ நடவடிக்கையினுடைய விளைவுகளே, இலங்கை அரசு தமிழர்கள் மீது இனப்படுகொலையை மேற்கொண்டது என்ற குற்றச்சாட்டை தமிழர்கள் முன்வைக் கும் நிலையை உருவாக்கியது. ஐக்கிய நாடுகள் சபையும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும், சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கைகளை அங்கீகரிக்காமல் பேச்சளவில் மட்டும் கையாளும் வரை சுயநிர்ணய உரிமைக்காக போராடுகின்ற அனைத்து மக்களும், தொடர்ந்தும் பாதிக்கப்படுபவர்களாகவே இருப்பார்கள் - என்றார். (ஐ-இ)

## புத்தர் சிலைகளை சேதப்படுத்தியவருக்கு மறியல் நீடிப்பு!

கொழும்பு, மார்ச் 22

குளியாப்பிட்டிய ரத்மலேவத்தப் பிரதேசத்தில் கடந்த வியாழக்கிழமை புத்தர் சிலைகளைச் சேதப்படுத்திய சம்பவம் தொடர்பில், சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இந்தியப் பிரஜை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேகநபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் அவரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை தொடர்ந்தும் மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண குறிப்பிட்டார். (ற-இ)

## தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தை திருத்த நடவடிக்கை எடுக்கவும்

### மஹிந்த அமரவீர பணிப்புரை

கொழும்பு, மார்ச் 22

20 ஆண்டுகளுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாது உள்ள தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தை விரைவில் திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர, அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்கவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய சுற்றுச்சூழல் சட்டம் திருத்தம் செய்யப்படுவது தொடர்பான கலந்துரையாடலொன்று சுற்றுச்சூழல் சுற்றாடல் அமைச்சில் நடைபெற்றது.

மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை, புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியின் முன்னேற்றம் ஆகியவை தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் மதிப்பீடு செய்யப்பட்டதுடன்,தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான பணிப்புரையையும் சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர விடுத்தி ருந்தார். (ஐ-இ)

## 157 ஆண்டுகளில் 3,137 பொலிஸார் சேவையின் போது உயிரிழப்பு

### வன்னிப் பிராந்திய பொலிஸ்மா அதிபர் தகவல்

வவுனியா, மார்ச் 22

1864ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரையிலான காலப்பகுதியில்,இலங்கையில் 3 ஆயிரத்து 137 பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையின் போது உயிரிழந்துள்ளதுடன், ஆயிரத்து 610 உத்தியோ கத்தர்கள் ஊனமுற்றுள்ளனர் என வன்னிப் பிராந்திய பொலிஸ்மா அதிபர் லால் செனவிரத்ன தெரிவித்துள்ளார். 157 ஆவது பொலிஸ் வீரர்கள் தினத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

1864ஆம் ஆண்டு மார்ச் 21ஆம் திகதி சந்தேகநபர் ஒருவரை கைது செய்வதற்காக செல்கையில் துப்பாக்கி பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார். சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட பொலிஸார் ஒருவர் உயிர்நீத்த முதலாவது சந்தர்ப்பமாக இது அமைந்தது. அன்றைய தினம் பொலிஸ் வீரர் நினைவு தினமாக நினைவுகூரப்படுகிறது.

சேவையில் உயிரிழந்த பொலிஸ் உத்தியோகர்களின் குடும்பத்தினருக்கும் ஊனமுற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட வேண்டிய நலன்புரி வசதிகள் எவ்வித தடையுமின்றி வழங்குவதற்கு இலங்கை பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றார். (வ-18)



# கச்சதீவு மீட்பு என்பது வெறும் தேர்தல் பேச்சு



### அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

கண்டி, மார்ச் 22

கச்சதீவை மீட்கப்போகிறோம் என தமிழக அரசியல்வாதிகள் தெரிவிக்கும் கருத்துக்கள் வெறும் தேர்தல் பேச்சுகளே என ஊடகத் துறை அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான ஹெகலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாரின் அழுத்தங்களுக்கும் நாம் அடிபணியமாட்டோம். இறையான்மை கொண்ட நாடாக நாங்கள் சுதந்திரமாகவே செயற்படுகின்றோம். 13ஆவது திருத்தம் குறித்து இந்தியாவுடன் நட்புரீதியாக எமக்கு பேச்சு நடத்தமுடியும். கச்சத்தீவு விவகாரம் இன்று நேற்று உருவானதல்ல. பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல அரசியல்வாதிகள் அரசியல் தேவைக்காக தேர்தல்கள் நெருங்கும் போது மக்களுக்கு அதனைத் தருவோம், இதனைத் தருவோம் என்கின்றார்கள். எனினும் இந்தியா எமது அயல்நாடு. மிகவும் நெருக்கமான நட்பு நாடு. ஆகவே கச்சத்தீவு விவகாரத்தில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்றார். (வ-இ)

# ஊடகங்களை அடக்க என்னாலும் முடியும்



## கோத்தா இறுமாப்பு

கொழும்பு,மார்ச் 22

ஊடக சுதந்திரம் என்பது ஊடக நிறுவன உரிமையாளர்களின் சுதந்திரமல்ல. சில ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு நாட்டை ஆட்சி செய்ய வேண்டுமென்ற தேவை இருந்த போதும், அவ்வாறு செய்ய முடியாது. நான் ஜனாதிபதி என்ற வகையில் ஊடகத் துறைக்கு எவ்வித அழுத்தங்களையும் செய்யவில்லை. பல்வேறு குழுக்களின் பிழையான வழிநடத்தலில், நாட்டையும், மக்களையும் மீண்டும் பாதாளத்துக்குள் தள்ள முயற்சித்தால் , அத்தகையவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பின் நிற்கப்போவதில்லை.

இவ்வாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்தார்.

நுவரெலியா வலப்பனை யோம்பு வெல்தென்ன பிரதேசத்தில் இடம் பெற்ற 'கிராமத்துடன் உரையாடல்' நிகழ்ச்சித் திட்டத்தில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவரது ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நான் ஜனாதிபதியாக 60 மாதங்களைக் கொண்ட பதவிக் காலத்தில், 16 மாதங்கள் மட்டுமே நிறைவடைந்துள்ளன. இன்னும் குறிப்பிடத்தக்க காலம் உள்ளது. அடுத்த ஜனாதிபதித் தேர்தல் பற்றி சிலர் குழப்பமடைந்துள்ளனர். அதுபற்றி எவரும் குழப்பமடையத் தேவையில்லை. அதனைத் தீர்மானிப்பது மக்களேயாகும்.

எஞ்சியுள்ள பதவிக் காலத்தில் தேசிய பொருளாதாரத்தையும், கிராமிய மக்களையும் முன்னேற்றுவதற்குரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்து மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவேன்.

நான் ஒருபோதும் சுற்றாடலுக்கு அழிவை ஏற்படுத்தவில்லை. கொழும்பு நகரத்தை பசுமைப் பூங்காவாகவே மாற்றினேன். சுற்றாடலுக்காக எதையுமே செய்யாதவர்கள் என்னை நோக்கி விரல் நீட்டுவது கவலைக்குரியது.

சுற்றாடலைப் பாதுகாத்திருந்தால் இன்று அவர்கள் ஊடகங்களுக்கு முன்னால் வந்து அழுது புலம்ப வேண்டி இருக்காது என்று ஜனாதிபதி தெரிவித்தார்- என்றுள்ளது. (க-இ)



# கைதடி சந்தைக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு கோரிக்கை

கொடிகாமம், மார்ச் 22

கைதடி பொதுச்சந்தையில் உள்ள குறைபாடுகளை விரைவில் நிவர்த்தி செய்து தருமாறு அங்குள்ள வியாபாரிகள் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் திருமதி நிரஞ்சன் கலைவாணியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கைதடி பொதுச் சந்தையின் நிலை தொடர்பில் ஆராய நேற்று முன்தினம் உறுப்பினர் கலைவாணி சென்றிருந்தார். இதன் போது அங்குள்ள வியாபாரிகள் தாம் தொடர்ச்சியாக எதிர்நோக்கும் மின்சாரவசதி இன்மை மற்றும் சுத்தமான மலசலகூட வசதியின்மை உள்ளிட்ட பிரச்சினைகளை விரைந்து நிவர்த்தி செய்து தருமாறு கோரியுள்ளனர்.

இது தொடர்பில் பிரதேச சபையின் கவனத்துக்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்க முயற்சிப்பேன் என பிரதேச சபை உறுப்பினர் திருமதி கலைவாணி வியாபாரிகளுக்கு இதன்போது உறுதியளித்தார். (வ-159)

# புலிகளின் போர்க்குற்ற ஆவணப்படமாம்!

## இலங்கை அரசு வெளியீடு

கொழும்பு, மார்ச் 22

தமிழீழ விடுதலைப் புலிகள் போர்க்குற்றத்தில் ஈடுபட்டார்கள் என்று கூறி, தீவிர சிங்கள வாத நிலைப்பாடுடைய தரப்பினர் ஆவணப் படமொன்றை வெளியிட்டுள்ளனர். இந்த ஆவணப்படத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, சில பௌத்த பிக்குகள் உள்ளிட்ட தரப்பினர் தோன்றி கருத்து தெரிவித்துள்ளனர். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான வாக்கெடுப்பு இன்று இடம்பெறவுள்ள நிலையில், பிரிட்டன், அமெரிக்கா, சுவீடன், கனடா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளில் சிங்களவர்கள் மத்தியில் திரையிடப்பட வுள்ளது. (ஒ.இ)

# சில அமைச்சர்களால் ஆதரவை இழப்பீர்கள்

### ஜெனிவாவுக்கான பிரதிநிதி எச்சரிக்கை

கொழும்பு,மார்ச் 22

சரத் வீரசேகர உள்ளிட்ட சில அமைச்சர்கள் வெளியிடும் தேவையற்ற அறிக்கைகள் காரணமாக, இலங்கை சில நாடுகளின் ஆதரவை ஐ.நா. வில் இழக்க நேரிடும் என்று ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சந்திரபிரேமா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு கடுமையானபின்னடைவுகளை ஏற்படுத்தக் கூடியவாறு இலங்கையில் சில அமைச்சர்கள் செயற்படுகின்றனர்.

பர்கா மற்றும் நிகாப் ஆகியவற்றைத் தடை செய்வதற்கான நடவடிக்கை இதற்கு எடுத்துக் காட்டு. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையை ஆதரிக்கும் நாடுகளில் அரைவாசி முஸ்லிம் நாடுகள். அதன் காரணமாக அந்த நாடுகளின் உணர்வுகளைப் புண்படுத்தாமல் இருக்க இலங்கை கவனமாக இருக்க வேண்டும். என்றார். (க-இ)

## முல்லை மாவட்டச் செயலகத்தில்

# சமுர்த்தி அலுவலர்களுக்கு வரவு–செலவு தெளிவுபடுத்தல்

முல்லைத்தீவு, மார்ச் 22

முல்லைத்தீவில் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்துவது தொடர்பாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு தெளிவுபடுத்தும் கூட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இரண்டு லட்சம் சமுர்த்தி பயனாளிக் குடும்பங்களை மையமாகக் கொண்ட முழுமையான மனைப் பொருளாதார மேம்பாடு, 25 ஆயிரம் இளம் பெண் தொழில் முயற்சியாளர்களை இலக்குவைத்து வர்த்தக வலையமைப்பை மேம்படுத்தல், 5 ஆயிரம் சௌபாக்கியா உற்பத்தி மாதிரிக் கிராமங்களை வலுவூட்டல் மற்றும் மின்சார வசதியில்லாத அனைத்து குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கும் மின்சாரம் வழங்கல் போன்ற திட்டங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் திருமதி. ஜெயபவானி, சமுர்த்தி சிரேஷ்ட முகாமையாளர் யோகேந்திரன் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (ச-213)

# வவுனியா வாள்வெட்டில் தாயும் மகளும் படுகாயம்!

*கணவன் தலைமறைவு!*

வவுனியா, மார்ச் 22

வவுனியாவில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் தாயும் மகளும் படுகாயமடைந்த நிலையில், வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

தாயும் மகளும் நேற்றுமுன்தினம் இரவு வீட்டில் தங்கியிருந்த நிலையில் குடும்பத் தலைவரால் வாள்வெட்டுத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். இதனால் படுகாயமடைந்த இருவரும் மீட்கப்பட்டு வவுனியா மருத்துவமனையின் விபத்துப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

வாள்வெட்டில் ஈடுபட்ட கணவன் தப்பிச் சென்றுள்ள நிலையில், வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-110)

# கிராம உற்பத்திகளை விற்க கைதடியில் தனி நிலையம்

சாவகச்சேரி, மார்ச் 22

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவில் கிராம சக்தி திட்டத்தின் கீழ், உற்பத்திக் கிராம உற்பத்தியாளர்களின் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்காக கைதடி தெற்கில் உருவாக்கப்பட்ட விற்பனை நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது. இந்த விற்பனை நிலையத்தை பிரதேச செயலாளர் உ.சுபலிங்கம் திறந்து வைத்தார். உற்பத்திக் கிராம சக்தி சங்கத் தலைவர் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. உற்பத்திக் கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருள்கள் இந்த நிலையத்தின் ஊடாக மக்களுக்கு விநியோகிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)

# இனவாதம் பரப்பினரென இருவர் கைது

கொழும்பு,மார்ச் 22

இனவாதக் கருத்துக்களைப் பரப்பினர் என்ற குற்றச்சாட்டில், இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பயங்கரவாதத் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவர்களில் ஒருவர் மாவனெல்லப் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடைய நபர். இவர் கடந்த டிசெம்பர் மாதம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து நாடு திரும்பினார் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-இ)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வரப்புயர நீருயரும்!

இன்று உலக நீர் தினம். நீரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், 1992ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டு 1993ஆம் ஆண்டு முதல் வருடாவருடம் இந்தத் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தொனிப்பொருளில் இந்தத் தினம் கடைப்பிடிக்கப்படும். இந்த வருடத்துக்கான தொனிப்பொருள் 'நீரின் பெறுதியை அறிதல்' என்பதாக அமைகின்றது.

இலங்கையில் குறிப்பாக வடபகுதியில் 'நீரின் பெறுதியை அறிந்தவர்களாக – உணர்ந்தவர்களாக நாம் செயற்படுகின்றோமா?' என்று கேட்டால் அதற்குரிய பதில் நிச்சயம் நாம் பெருமைப்படும் வகையில் இருக்காது.

அண்மையில் வலிகாமம் வடக்கு ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட இரு விடயங்கள் இதயத்தைக் கனக்க வைத்தன. வலிகாமம் வடக்கில் காணிகளை உரித்துடையவர்களாகக் கொண்டு வலி வடக்குக்கு வெளியில் வசிக்கும் மக்கள் வலிகாமம் வடக்கில் தமக்குள்ள காணிகளில் இருக்கும் கிணறுகளில் இருந்து தண்ணீரை தனியார் நிறுவனத்துக்கு விற்பனை செய்கின்றனர் என்பது அந்த இரு விடயங்களில் ஒன்று. இரண்டாவது, வலிகாமம் வடக்கில் இருந்து தினமும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான தண்ணீர் தனியார் நிறுவனமொன்றால் அகழ்ந்து உறிஞ்சப்பட்டு பிற இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது என்பதாக அமைந்தது. இரண்டும் பாரதூரமானவை.


அதேபோன்று காரைநகர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும், தீவக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் தண்ணீர்த் தேவையை தற்சார்பு முறையில் நிறைவேற்ற முடியாத துர்ப்பாக்கியவாதிகளாக அந்தப் பகுதி மக்கள் உள்ளனர் என்ற விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பில் தம் ஆதங்கத்தை அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் கொட்டித் தீர்த்தனர்.

மேற்படி தகவல்கள் எமக்குச் சொல்லும் செய்தி என்ன?. யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒரு பகுதியில் தண்ணீர்த் தேவையை தற்சார்பு அடிப்படையில் நிறைவேற்ற முடியாதவர்களாக ஒரு பகுதி மக்கள் உள்ளனர். அதேநேரம் தண்ணீரின் பெறுமதியை அறியாது அவற்றை தனியார் நிறுவனங்களுக்கு விற்பவர்களாக பிறிதொரு பகுதி மக்கள் உள்ளனர். ஆக, இம்முறை 'நீரின் பெறுதியை அறிதல்' என்ற தொனிப்பொருள் எமக்காகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது போலும்.

இஸ்ரேல் ஒரு பாலைவனப் பூமி. இது அனைவரும் அறிந்ததே. ஆனால் அங்கு மக்கள் தமக்குத் தேவையான தண்ணீரை தற்சார்பு அடிப்படையில் நிறைவேற்றிக் கொள்கின்றனர் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்?. இஸ்ரேலில் தண்ணீர் சேகரிப்புத் திட்டங்கள் மிக நுட்பமாகவும் வினைத்திறனாகவும் மக்களால் முன்னெடுக்கப்படுகின்றன. புதிதாக ஒருவர் வீடொன்றைக் கட்டுவதற்கு விரும்பினால், வீடு கட்டுவதற்கான மாதிரி வரைபடத்துடன் தண்ணீர் சேகரிப்புத் தொட்டிக்கான (மழையால்) வரைவுகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு சமர்ப்பித்தால் மட்டுமே இஸ்ரேலில் வீடொன்றை அமைக்கலாம். அதேபோல அரசாலும் பல இடங்களில் மிகப் பிரமாண்டமான தண்ணீர் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதே நுட்பத்தை வடக்கில் பின்பற்றினாலேயே இங்குள்ள தண்ணீர்த் தட்டுப்பாட்டை ஓரளவு நிவர்த்தி செய்ய முடியும்.

காரைநகரில் ஒவ்வொரு நாளும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் லீற்றர் தண்ணீர் சராசரியாகத் தேவை. அவ்வளவு தண்ணீருக்காகவும், பிற தேசங்களைத் தான் நம்பியிருக்கின்றது காரைநகர். இந்த தண்ணீர் சேகரிப்புத் திட்டங்களை உரிய முறையில் கட்டமைத்திருந்தால் மழைகாலம் முடிந்த ஓரிரு மாதங்களுக்காவது தண்ணீரில் தன்னிறைவுடன் அவர்கள் இருந்திருப்பார்கள்.

''வரப்புயர நீர் உயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும், குடியுயரக் கோலுயரும், கோலுயரக் கோனுயர்வான்,'' என்பது தமிழ்க் குடியின் தொன்றுதொட்ட கொள்கை. தண்ணீர் சேமிப்புக்கான எம் வரப்புகள் உயரட்டும். ஏனெனில் உயர்வது வரப்பு மட்டுமல்ல எம் வாழ்க்கையும் கூட.




# கூட்டமைப்பிலிருந்து சென்றவர்களை மீள இணைக்க ரெலோ முயற்சிக்கும்

## செல்வம் எம்.பி தெரிவிப்பு

**புதுக்குடியிருப்பு, மார்ச் 22**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் எல்லோரையும் இணைக்கும் முயற்சியை தமிழ் ஈழ விடுதலை இயக்கம் மேற்கொள்ளும் என அதன் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**



ரெலோ கட்சியின் பொதுக்குழுக்கூட்டம் புதுக்குடியிருப்பில் நேற்று நடைபெற்றது. அதைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்து ரெலோ தவறுகளைச் சுட்டிக்காட்டும். யார் பிழை விட்டாலும் அது பிழையாகக் கருதும். விட்டுச் சென்றவர்களை மீண்டும் கூட்டமைப்புக்குள் இணைக்கும் செயற்பாட்டை செய்வதற்கான ஆயத்தங்களை முன்னெடுக்கும். கூட்டமைப்பு மீண்டும் ஒரு பலத்துடன் யாப்புடன் பதிவுசெய்யப்பட்ட ஒரு கட்சியாக செயற்படுவதற்கான தேவை உருவாகியுள்ளது - என்றார். (வ-19)

# இந்தியாவின் பா.ஜ.கவுடன் எவ்வித தொடர்பும் இல்லை

## மீளவும் சொல்கிறார் இலங்கை பா.ஜ.க தலைவர்

யாழ்ப்பாணம், மார்ச் 22

இந்தியாவில் இயங்கும் பாரதிய ஜனதா கட்சிக்கும், தங்கள் கட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என இலங்கை பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் வி.முத்துசாமி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையின் கச்சதீவை இந்தியா எந்தக் காலத்திலும் மீளப் பெறப்போவதில்லை. இலங்கை அரசும் கச்சதீவை விட்டுக்கொடுக் கப்போவதில்லை. இந்தியாவில் இயங்கும் பாரதிய ஜனதா கட்சிக்கும், எங்கள் கட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. கட்சி அரசியலுக்கான எண்ணம் எங்களுக்கு இல்லை. எமது கட்சி பற்றிய அறிவிப்புக்கு இலங்கையிலும் உலகமெங்கும் இருந்து தமிழ் மக்கள் ஆதரவு தெரிவித்துவருகின்றனர். ஏற்கனவே இலங்கையில் நூற்றுக்கணக்கில் கட்சிகள் உள்ள நிலையில் பத்தோடு ஒன்றாக நாங்கள் இருக்கத் தயாராகவில்லை. வடக்கு கிழக்கை அப்பகுதி மக்களது முழுமையாக ஆதரவுடன் மீளக்கட்டியெழுப்பு வதே எங்கள் முயற்சியாகும். வடக்கிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதே எங்கள் நோக்கம். அதற்கேதுவாக



மொழிக் கற்கைகளை இலவசமாக வழங்க மாநகர முதல்வருடன் பேசியுள்ளோம். அதற்கான இடம் ஏற்பாடு செய்யப்பட்டதும் கற்கைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளன. தமிழ்க் கட்சிகள் கண்டுகொள்ளாதுள்ள கல்வி, கலாசாரம் மற்றும் விளையாட்டை மேம்படுத்துவதன் ஊடாக பொருளாதார மேம்பாட்டை வடகிழக்கில் மேம்படுத்த முடியும் எனத் தெரிவித்துள்ளார். (வ-20)

## முதலாம் பக்க தொடர்ச்சிகள்....

### மனசாட்சி...

சர்வதேச அரங்கில் மனசாட்சியுள்ள நாடுகள் இலங்கை மீதான பிரேரணையைத் தோற்கடித்தே தீரவேண்டும். இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பான பிரேரணை இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அதைத் தொடர்ந்து பிரேரணை மீதான வாக்கெடுப்பு இன்று அல்லது நாளை நடத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவு வழங்கி பிரேரணையைத் தோற்கடிக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளிடம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்தார். நாமும் பல நாடுகளின் முக்கியஸ்தர்களுடன் சந்திப்புக்களை நடத்தி பிரேரணையின் உள்நோக்கத்தையும், எமது நிலைப்பாட்டையும் எடுத்துரைத்திருந்தோம். எனவே, மனசாட்சியுள்ள நாடுகள் இலங்கை மீதான பிரேரணையைத் தோற்கடித்தே தீரவேண்டும்.

இலங்கை அனைத்து நாடுகளுடனும் ஒன்றிணைந்து பயணிக்கவே விரும்புகின்றது. ஆனால், சில நாடுகள் எமது நாட்டை ஏதோவொரு வகையில் பழி வாங்கும் வகையில் செயற்படுகின்றன. ஆனால், நாம் மனசாட்சியின் பிரகாரம் செயற்படுகின்றோம் - என்றார். (எ-22)

### சபுகஸ்கந்தவில்...

பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் 20 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அதையடுத்து ஆயிரத்து 200 பணியாளர்களும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 474 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

### வீட்டு வர்ணம்...

திருநெல்வேலியைச் சேர்ந்த 3 குடும்பங்களைச் சேர்ந்த 6 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், வீட்டுக்கு வர்ணம் பூச வந்த ஒருவராலேயே அவர்களுக்குத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் 11 பேருக்கு நேற்றுத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 7 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலியில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 6 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வீட்டுக்கு வர்ணம் பூச வந்த பளையைச் சேர்ந்த ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து இந்தக் குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தன. அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 6 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோண்டாவில் சாரதி பயிற்சிப் பாடசாலையைச் சேர்ந்த பயிற்சியாளர் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அங்கு பணியாற்றும் ஒருவருக்கு ஏற்கனவே தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் அவருடன் தொடர்புகளைப் பேணியோர் தனிமைப்படுத்தப்பட்டு அவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதிலேயே ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் ஏற்கனவே தொற்றுடன் இனங்காணப்பட்டவருடன் நேரடித் தொடர்பில் இருந்தவராவார்.

ஊர்காவற்றுறையில் 3 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை, மெலிஞ்சிமுனையில் உள்ள இறப்பு வீடொன்றில் தொற்றாளர் ஒருவர் பங்கேற்றதை அடுத்து, அந்த இறப்பு வீட்டில் கலந்துகொண்டவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மன்னார் மாவட்டத்தில் நேற்று 3 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்கள் ஏற்கனவே தொற்றுடன் இனங்காணப்பட்டவர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

### விபத்தில்...

டைந்தவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

கந்தசாமி கணேசராஜா (வயது-48) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு தனியார் வகுப்புக்கு சென்ற மகளுக்குப் பாதுகாப்பாகச் சென்றபோதே இவர் விபத்தில் சிக்கியுள்ளார். இருவரும் தனித்தனியான சைக்கிள்களில் பயணித்துள்ளனர். வீதியின் வலப் பக்கத்தில் இருந்து இடப்பக்கமாகத் திரும்பி வீதியோரம் சென்ற நிலையில் பின்புறமாக வந்த கார் இவர் மீது மோதியுள்ளது. அதையடுத்து கணேசராஜா மயக்கமடைந்துள்ளார்.

அவர் உடனடியாக கிளிநொச்சி மருத்துவனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்களுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் நேற்றுமுன்தினம் இரவு 11.45 மணியளவில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமாரால் நேற்று மேற்கொள்ளப்பட்டது. (எ-26)

# இலங்கையுடன் ஒன்றிணைவோம்

## பங்களாதேஷ் பிரதமர் உறுதி



கொழும்பு,மார்ச் 22

**வியாபாரத் துறையில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேம்படுத்துவோம். அதற்காக இலங்கையுடன் ஒன்றிணைந்து பங்களாதேஷ் செயற்படும் என்று பங்களாதேஷ் பிரதமர் ஷெயிக் ஹசீனா தெரிவித்தார்.**

இலங்கை மற்றும் பங்களாதேஷ் பிரதமர்களுக்கு இடையிலான இரு தரப்பு பேச்சுவார்த்தை, டாக்கா நகரில் உள்ள பங்களாதேஷ் பிரதமரின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன் போது பொருளாதாரம், முதலீடு, சந்தை, தொழில்நுட்பம், விவசாயம், கடற்றொழில் கைத்தொழில் மற்றும் அரசியல் உறவு ஆகியவற்றைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

கொவிட்19 வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு, பங்களாதேஷ் பிரதமர் பாராட்டுத் தெரிவித்தார்.

நாட்டை முடக்காமல் கொவிட் தடுப்பூசிகளைச் செலுத்தும் நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்கும் போது, வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்பது உணரப்பட்டுள்ளது. பங்களாதேஷ் நாட்டு மக்களை பாதுகாக்க விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பங்களாதேஷ் பிரதமர் தெரிவித்தார்.

சார்க் அமைப்பு கொவிட்-19 அவசர நிதியத்தின் ஊடாக, வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் மருத்துவ உபகரணங்களை வெகுவிரைவில் இலங்கைக்கு வழங்குவோம் என்று பங்களாதேஷ் பிரதமர் ஷெயிக் ஹசீனா உறுதியளித்தார்.

இலங்கை மாணவர்கள், பல்கலைக் கழகங்களில் உயர் கல்வியைப் பயில்வதற்கு, பங்களாதேஷுக்கு வருகை தர வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

இரு நாடுகளுக்கும் இடையில் விமான சேவையை விரிவுபடுத்தி சுற்றுலாத் துறை சேவை கைத்தொழில் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளை முன்னேற்றுவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

தீவிரவாதம் மற்றும் மனித கடத்தல் வியாபாரம் ஆகியவற்றை முழுமையாக இல்லாதொழிக்கத் தேவையான நடவடிக்கைகளை செயற்படுத்த இரு நாடுகளும் இணக்கம் தெரிவித்தன.

பேச்சுவார்த்தை நிறைவு பெற்றதன் பின்னர், இரு நாட்டு பிரதமர்களின் முன்னிலையில் இலங்கை மற்றும் பங்களாதேஷ் இடையே ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. (க-இ)

## மரண அறிவித்தல்



### பாக்கியநாதன் ஆனந்தசிங்

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் வடக்கு சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியநாதன் ஆனந்தசிங் 20.03.2021 சனிக்கிழமை கத்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாக்கியநாதன் சாந்தம்மாள் ஆகியோரின் அன்பு மகனும் மேசியின் அன்புக்கணவரும், ஜெயமலர், காலஞ்சென்ற வில்லியம் ரஞ்சித், ஜெயரட்ணசிங்கம் (மேஜர், இலங்கை இரட்சணியசேனை), காலஞ்சென்ற ஜலின் அன்னபூரணி (ஆசிரியர்), பிறிம்றோஸ் தேவனேசம் (அவுஸ்ரேலியா), விக்டர் கிருபாகரன் (வர்த்தகசங்கம், வவுனியா), கத்தரின் நேசபாய் (அருட்சகோதரி, தென்னிந்திய திருச்சபை, நெடுந்தீவு), ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற ஈவா, தர்சினி (கனடா), சாள்ஸ் சுதர்சன், ரஞ்சித்குமார் (கட்டார்), நிரோசினி (கனடா), இவாஞ்சலின் (ஆசிரியர், மு/பாலிநகர் மகாவித்தியாலயம்), ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், திருவேரகன் (கனடா) கயல்விழி, பிருந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஹெவின், அஹானா, அல்வின், ஆர்வின், ஷஷிஷான் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 22.03.2021 இன்று பி.ப 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பண்டத்தரிப்பு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(0772119878)

## இன்றைய நாள்

**மேடம்:** செலவுகளை குறைக்க முயன்று வெற்றி பெறுவீர்கள். பணிகளை எல்லாம் இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி இருக்கும். கடந்த காலத் தவறுகளை நினைத்து வருந்தி மாறுவீர்கள்..

**இடபம்:** வாழ்வில் புதிய பாதை அமைத்து முன்னேறுவீர்கள். நீங்கள் முயன்ற விஷயங்கள் எல்லாம் துலங்கும். தள்ளிப்போன சுபநிகழ்ச்சிகள் இப்போது கூடி வரும்

**மிதுனம்:** குடும்பத்தினர் இடையே நெருக்கம் உண்டாகும். சமீபத்தில் கிடைத்த புதிய நட்பால் உற்சாகம் அடைவீர்கள் அலுவலக வேலைகள் நல்லபடியாக முடிந்து நிம்மதி அளிக்கும்.

**கடகம்:** மன அமைதி கூடுதலாகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பல நாள்கள் தள்ளிப்போட்ட பணி ஒன்று நல்லபடியாக முடியும். அறிஞர் நட்பால் தெளிவடைவீர்கள். ஆலோசனை தருவீர்கள்.

**சிம்மம்:** மனைவி உங்களின் புதிய திட்டங்களை ஆதரிப்பார். கோபம் தீரும். உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள். நற்செய்திகள் வரும். சோகமாக இருந்த உங்களின் முகம் மலர்ச்சி அடையும்.

**கன்னி:** புதிய நண்பர்கள் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள். எதிர்பார்த்த வேலைகள் முடியும். புதிய வாகனம் வாங்குவதற்கான ஏற்பாடு செய்வீர்கள்.

**துலாம்:** திடீர் செலவுகள் ஏற்படலாம். பயங்கள் நீங்கும். வெளி வட்டாரப் பழக்கத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர்.

**விருச்சிகம்:** எந்த விடயத்திலும் அவசர முடிவு எடுக்க வேண்டாம். பிறரால் உங்கள் மீது பழி ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வெளிநாடு செல்லத் திட்டமிடுவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு.

**தனுசு:** தன்னம்பிக்கை கூடும். நண்பர் மூலம் நல்ல செய்தி வரும். சகோதரரால் பயனடைவீர்கள். நன்றி உணர்வு அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள்.

**மகரம்:** முடிவுகள் எடுப்பதில் இருந்த தடுமாற்றம் நீங்கும். தடைப்பட்டு வந்த குழந்தை பாக்கியம் இனி கிடைக்கும். பிள்ளைகளின் கல்வி, பணி போன்றவற்றுக்கு செலவு வரும்.

**கும்பம்:** அலைச்சலை குறைத்தது உடல்நலனில் கவனம் செலுத்துங்கள். பணியில் முழுக் கவனம் செலுத்தி நற்பெயர் எடுப்பீர்கள். சிறு உடல் நலக்கோளாறுகள் தீர்ந்து நிம்மதி வரும்.

**மீனம்:** அலுவலக நண்பர்களால் புதிய நன்மை உண்டாகும். தொகைக்கு மேல் தொகை வந்து சேர்ந்து மகிழ்ச்சி தரும். உடல் நலம் பற்றி நீங்கள் கொண்டிருந்த பயங்கள் தீரும்.

# வீட்டுக் கூரை அமைப்புக்காக அழிக்கப்படும் பனை மரங்கள்

கிளிநொச்சி, மார்ச் 22

பச்சிலைப்பள்ளி பிரதேச ச்பைக்கு உட்பட்ட கட்டைக்காடு, கோவில் மற்றும் வெட்டுத்துரவு போன்ற பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் பனை மரங்கள் தறிக்கப்பட்டு வீடுகளின் கூரை வேலைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மீள்குடியேறிய பின்னர் இதுவரை பராமரிப்பற்ற நிலையில் உள்ள காணிகளில் இருந்தே இவ்வாறு பனை மரங்கள் சட்டவிரோதமான முறையில் வெட்டி அழிக்கப்படுகின்றன என்று அப்பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த பகுதிகளில் இராணுவக் காவலரண்கள் அமைந்துள்ள போதிலும் இவ்வாறன சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம் பெற்றுவருகின்றன எனவும் அவர்கள் கவலை தெரிவித்தனர். இது தொடர்பில் உரிய அதிகாரிகள் விரைவில் நடவடிக்கை எடுத்து பனை வளத்தை பாதுகாக்க வேண்டும் என்று பிரதேச மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

## காணிகளை பகிர்ந்தளித்தாரென பிரதேச சபை உறுப்பினர் கைது

திருமலை,மார்ச் 22

வனப் பகுதியை அழித்து, வேறு தரப்பினருக்குக் காணிகளைப் பகிர்ந்தளித்தார் என்ற குற்றச்சாட்டில், கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கிடைக்கப்பெற்ற முறைப்பாட் டுக்கமைய நேற்றுமுன்தினம் மாலை அவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய் ஜயந்திபுர வட்டாரத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 56 வயதுடைய நபர் ஒருவரே இக் குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் வன பரிபாலன அதிகாரிகளிடம் எந்தவிதமான முன் அனுமதியும் பெறாமல் வனப்பகுதியை அழித்து, அந்தக் காணிகளைப் பகிர்ந்தளித்துள்ளார். இது தொடர்பாக விசாரணை செய்த வன இலாகா அதிகாரிகளின் கடமைக்கும் இடையூறு விளைவித்துள்ளார் என்று அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. (க-இ)

## தகவல் கோபுரத்துக்காக அழிக்கப்படும் மலைகள்

இரத்தினபுரி மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள தகவல் தொடர்புக் கோபுரங்களுக்காக அங்கு காணப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க மலைகள் அழிக்கப்படவுள்ளன. இதனைத் தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சுமார் 40அடி உயரமான மலைகள் இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளன என்று எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தேசிய வளப் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் வண. எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார். இரத்தினபுரி மாவட்டத்தில் தொலைபேசி சமிக்ஞைகள் குறைவாக இருப்பதால், 35 புதிய தொலைபேசிக் கோபுரங்கள் 'கிராமத்துக்கான தொடர்பாடல்' திட்டத்தின் கீழ் அமைக்கப்பப்படவுள்ளன. சிவில் விமான போக்குவரத்து நிறுவனம், மத்திய சுற்றுச்சூழல் ஆணைக்குழு, வனவளப் பாதுகாப்பு, தொல்பொருள் திணைக்களம் ஆகியவற்றின் ஒப்புதல் பெற்ற பின்னரே இத்திட்டத்துக்கான அனுமதி வழங்கப்படும். இதுவரை இது தொடர்பில் இறுதி முடிவும் எடுக்கப்படவில்லை என்று தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் இயக்குநர் ஹெலசிறி ரணதுங்க தெரிவித்துள்ளார். (க-இ)

## சில மாகாணங்களில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு,மார்ச் 22

ஊவா, கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் சிறிதளவில் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சில இடங்களில் பிற்பகலுக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிரதானமாக சீரான வானிலை நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும், மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும்.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## தவக்கால சிந்தனை

### பாவிகளும் பரமனின் பிள்ளைகளே!

ஒரு குருவிடம் ஆறு சீடர்கள் கல்வி கற்று பணி புரிந்து வந்தனர். நேர்மையும் கடமையும் வாய்மையும், பணிவும் நிறைந்த அந்த சீடர் குழாமில் ஒரு சீடர் தாறுமாறான பாவச் செயல்களைப் புரிந்து குருவின் பெயரைக் கெடுத்து வந்தார். அந்த நெறியற்ற சீடரைக் குறித்து ஏனைய சீடர்கள் தனித்தனியாக குருவிடம் முறையிட்டு அவரை ஆசிரமத்திலிருந்து நீக்கிவிடுமாறு கூறினர். ஆனால் குருவோ 'அவர் இருக்கட்டும்" என்றார்.

சீடரின் திருகுதாளம் உச்சக்கட்டம் அடையவே அனைவரும் ஒருமித்து குருவிடம் முறையிட்டனர். அப்போது 'அவர் இங்கேயே இருக்கட்டும்' என்றார். அப்போது அவர்கள் அப்படியென்றால் நாம் வெளியேறி விடுகிறோம் என்றனர். குரு அப்படியே செய்யுங்கள். அவர் இங்கேயே இருக்கட்டும்" ஏனெனில் அவருக்குத்தான் என் உபதேசம் தொடர்ந்து தேவை என்றார்.

நீதிமான்களுக்கு அல்ல பாவிகளுக்குத்தான் மனம்மாற சந்தர்ப்பமும் ஆற்றுப்படுத்தலும் வழங்க வேண்டும். இன்றைய நாள்களில் தவறுகள், தீமைகள், வன்முறைகள், கொலைகள், போதைப் பாவனைகள் கட்டுக்கடங்காது தொடர்கின்றன. இவர்கள் ஒதுக்கப்பட்டு ஓரங்கட்டப்படுகின்றனர்.

இவர்களது தடம்மாறலுக்கான காரணங்களை இணங்கண்டு உளவள ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் தொழில் பயிற்சிகளையும் வழங்கி சமூக கட்டமைப்புக்குள் உள்வாங்க சமய, சமூக தலைவர்கள் தொண்டு நிறுவனங்கள் முன் வரவேண்டும் பாவிகளை மனமாற அழைக்க வந்த இயேசுவின் பணியைத் தொடர்வோம்.

**எஸ்.யேசுதாஸ்,**
**கொழும்புத்துறை.**






# மாணவிகள் இருவருக்கு சைக்கிள்கள்

கொடிகாமம், மார்ச் 22

வரணி மத்திய கல்லூரியின் பழைய மாணவன் இளஞ்சோபன் - தர்சினியின் திருமணநாளை முன்னிட்டு "அற்றார் அழிபசி தீர்த்தல்"என்னும் தொனிப் பொருளில் இரு மாணவிகளுக்கு சைக்கிள்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

வரணி மத்திய கல்லூரியில் 2003 ஆம் ஆண்டு க. பொ.த சாதாரண தரம் கற்ற பழைய மாணவர்கள் மற்றும் 2006 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரம் கற்ற பழைய மாணவர்கள் ஆகியோரால், தரம் 6 இல் கல்வி கற்கும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த இரு மாணவிகளுக்கே இந்தச் சைக்கிள்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (ற-159)




# அனுமதி பெறாத கட்டடங்களை அகற்ற நடவடிக்கை எடுங்கள்

## சபை உறுப்பினர்களிடம் கோரிக்கை

வவுனியா, மார்ச் 22

வவுனியா சுற்றுலா மையத்துக்குள் நகரசபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத கட்டடங்களை உடனடியாக அகற்றுவதற்கு அழுத்தம் கொடுக்குமாறு தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த வவுனியா நகர சபை உறுப்பினர்களிடம் கட்சியின் செயலாளரும், மாகாண சபை முன்னாள் அமைச்சருமான ப.சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார் .

தமிழ் அரசுக் கட்சியின் மாவட்ட குழுக் கூட்டம் வவுனியா குடியிருப்பில் அமைந்துள்ள தாயகம் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா குளத்துக்குள் அமைக்கப்பட்ட சுற்றுலா மையத்தில் நகர சபையின் அனுமதியின்றி சில கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பாக தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்டக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதன்போது சட்டவிரோதமாக கட்டடங்கள் அமைக்கப்பட்டமையைத் தடுத்து நிறுத்த வேண்டும். குறித்த கட்டடங்களை விரைவாக அகற்றுவதற்கு எமது கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சபை நிர்வாகத்துக்கு அழுத்தம் வழங்கவேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இதேவேளை சபையின் அனுமதியின்றி அமைக்கப்பட்ட ஏனைய கட்டடங்களை உடைப்பதற்கு குத்தகையாளருக்கு ஒரு வார காலம் அவகாசம் வழங்குவது என்றும், அதற்குள் அவர் அதனை உடைக்கத்தவறி, நகர சபை தலையிட்டு அவற்றை அகற்றுவதுடன், அவரது குத்தகை ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் என்றும் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நகரசபை அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (த-110)



# பொலிஸ் தின நிகழ்வு

157 ஆவது பொலிஸ் தின நிகழ்வு காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்றது. பொலிஸ் நிலையத்தில் உள்ள நினைவுத் தூபிக்கு முன்பாக காலை 7.30 மணியளவில் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சர் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கலந்து கொண்டு மலர் அஞ்சலி செலுத்தினார். அத்துடன் பொலிஸ் நிலை யங்களின் பொறுப்பதிகாரிகள், பொலிஸார் மற்றும் ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஜ-26)

# கோத்தா ஆட்சியில் பெரும் சூழல் அழிவு

## சோபிந்த தேரர் வேதனை

கொழும்பு, மார்ச் 22

கோத்தாபய அரசாங்கத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் சுற்றாடல் அழிவு போல வேறு எவரின் காலத்திலும் காணவில்லை என ஓமல்பே சோபிந்த தேரர் கவலை வெளியிட்டுள்ளார்.

தற்போதைய அரசாங்கம் பெருமளவில் சுற்றாடலை அழிக்கிறது. மரங்கள், செடிகளை இந்தளவு அழிக்கும் யுகத்தை இதுவரை நாம் காணவில்லை என்பதை மிகவும் வேதனையுடன் தெரிவிக்கிறோம். யாருடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி இவ்வாறு செய்கின்றனர்? 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் ஜனாதிபதிக்கு மென்மேலும் அதிகாரம் வழங்கியது நாட்டைப் பாதுகாக்கவே. அவர் பொறுப்புடன் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இடம்பெறும் காடழிப்பு, சுற்றாடல் அழிப்பு, மோசடிகள் என்பவற்றை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)

# பண்டிகைக் காலத்தில் மக்களுக்கு நிவாரணம்

கொழும்பு, மார்ச் 22

எதிர்வரும் சித்திரைப் புதுவருட பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மக்களுக்கு, நிவாரணப் பொதியை வழங்குவதற்கு வர்த்தக அமைச்சு தீர்மானித்துள்ளது. நாடு முழுவதும் அனைத்து நகரங்களையும் உள்ளடக்கும் வகையில் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் அடங்கிய நிவாரணப் பொதி, நடமாடும் வாகனம் ஊடாக விநி யோகிக்கப்படவுள்ளது. ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த புதிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

காலை 7மணி முதல் மாலை 7 மணி வரையிலான காலப்பகுதிக்குள், இந்த நடமாடும் பொதியைக் கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

# ராஜாவின் விருப்பங்கள்

## அங்கம் 1

நீங்கள் வேலைவாய்ப்பிற்காக அல்லது நிரந்தரமாக வதிவதற்காக வேண்டி வெளிநாட்டுக்குச்செல்ல விரும்புகிறீர்களா. தயவுகூர்ந்து உங்களினதும் உங்களின் நெருங்கிய உறவுகளினதும் பாதுகாப்பை பற்றி முதலில் அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள். வெளிநாட்டுக்கு செல்ல விரும்பினால் எப்பொழுதும் பாதுகாப்பான பாதையை தெரிவு செய்யுங்கள். இந்த சித்திரக்கதையில் ராஜாவுக்கு என்ன நிகழ்கின்றது என்பதை தொடர்ந்து அவதானிக்கும் போது பாதுகாப்பான புலம்பெயர்வை பற்றிய உங்களின் பார்வைக்கோணத்தை அதிகரித்துக்கொள்ள முடியும். இப்பத்திரிகையில் 7 நாட்களுக்கு தொடராக பிரசுரிக் கப்படவிருக்கும் சித்திரக்கதையின் 1ஆவது அங்கம் இதுவாகும். ஒவ்வொரு அங்கத்தின் இறுதியிலும் பரிசுகளை பெறும் வாய்ப்புக்களும் வழங்கப்பட்டுள்ளது.

**மனித கடத்தல்காரர்கள் பற்றி விழிப்புடனிருங்கள்! பாதுகாப்பான வெளிநாடு செல்லும் பாதையை தெரிவு செய்வதற்கு IOM நிறுவனத்தின் நேரடி இலக்கம் 0774410086 இற்கு அழையுங்கள்.**



ராஜா பூஜாவின் மீது விருப்பம் கொள்கிறார். ஆனால் ராஜாவுக்கு போதிய கல்விப் பின்னணியும் வருமானம் தரும் தொழிலும் இல்லாததால்



பூஜாவின் தந்தை ராஜாவின் விருப்பத் திற்கு சம்மதிக்க வில்லை.



பூஜாவை வெளிநாட்டில் வசிக்கும் ஒருவருக்கு திருமணம் செய்து வைப் பதற்கே பூஜாவின் தந்தை விரும்பினார்.



அதனால் ராஜா வெளி நாட்டில் வசிப்பதற்கு ஒரு வழியைத் தேடினார்.



வெளிநாட்டில் தொழி லொன்றை தேடிக் கொண்டு பூஜாவோடு அங்கு வசிப்ப- தற்கு ராஜாவுக்கு விருப்பமாக இருந்தது.



இதற்கிடையில் ராஜவின் நெருங்கிய நண்பன் தனது உறவினரான அர்னோல்டை ராஜாவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். "இவர் அர்னோல்ட். இவர் என் உறவினர். இவருக்கு கொழும்பில் பெரிய வெளிநாட்டுக்கு அனுப்பும் ஏஜன்சியொன்றுள்ளது. இவர் நிறைய பேரை வெளிநாட்டுக்கு அனுப்பியிருக்கிறார்.




வெளிநாட்டு தொழில் முகவர் ஒருவர்சட்ட ரீதியானவரா என்பதை எவ்வாறு உறுதிப்படுத்திக் கொள்வது முடியும்?




விடை 1: 1989 என்ற இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்துவதன் மூலம்

விடை 2: இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் இணைய தளத்தில் தேடிப்பார்ப்பதன் மூலம்

மேலுள்ள கேள்விக்கு சரியான விடையை தெரிவு செய்வதன் மூலம் நாளாந்த பரிசுக்குலுக்களில் பரிசினை வெல்லுங்கள். உங்களின் விடையை அல்லது விடைகளை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களுடன் IOM நிறுவனத்தின் 0774410086 என்ற நேரடி இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.
விடைகளை SMS அல்லது வட்சப் அல்லது வைபர் மூலமாக 0774410086 என்ற இலக்கத்திற்கு அனுப்ப முடியும். S1 என்ற குறியீட்டை தவறாமல் குறிப்பிடவும்.

S1 விடை எண்(கள்), பிரசுரமான திகதி, பத்திரிகையின் பெயர்
பால்: ஆண் / பெண், வயது, ஊர் – மாவட்டத்தின் பெயர்
உதாரணம்: S1 3,4 22.03.2021 – உதயன், ஆண் 20 சிலாபம் – புத்தளம் மாவட்டம்.

**விடைகள் 07.04.2021 திகதி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.**

**பாதுகாப்பான மற்றும் முறையான புலம்பெயர்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இச்சித்திரக்கதை IOM நிறுவனத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

**புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் (IOM)**
**9ஆம் மாடி, IBSL கட்டிடம்,**
**80A, எல்விடிகலை வீதி, பொறல்லை, கொழும்பு 8.**



# நீரின்றி அமையாது இவ்வுலகு!



உலக நீர் தினம் இன்று

க.சுவாமிநாதன்
பொறுப்பாசிரியர்,
சுற்றாடல் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

புவியின் மேற்பரப்பில் 70 வீதத்துக்கு மேல் நீர் காணப்படுகின்றது. எனினும் குடிப்பதற்கு உகந்ததாக 0.03 வீதமான நீர்தான் உள்ளது. மிகுதி சமுத்திரம், கடல், கடல் நீரேரி, களப்பு போன்ற இடங்களில் உவர் நீராக உள்ளது.

1992ஆம் ஆண்டு பிரேசிலில் நடைபெற்ற உலகப்பொதுமையான மாநாடொன்றில் உலக நீர் தினம் தொடர்பான கருத்தியல்கள் மற்றும் கடைப்பிடிப்புகளுக்கு அத்திபாரம் போடப்பட்டது. அந்த வகையில் 2021ஆம் ஆண்டுக்கான தொனிப்பொருளாக 'நீரின் பெறுமதி' என்பது அமைந்துள்ளது.

எமது நாட்டில் புராதன காலம் தொட்டே வாழ்ந்துவந்த மக்கள், ஆட்சி செய்த மன்னர்கள் அவர்களது சமய, மொழி, கலாசார, பண்பாட்டு அம்சங்களில்கூட நீரை முக்கியத்துவமாகவும் நீரை சேமிப்பதையும் பிரதான பணியாகக் கொண்டு செயற்பட்டு இருந்தனர் என்று வரலாற்றுச் சான்றுகள் மூலமாக அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இதற்கு எடுத்துக்காட்டாக முதலாம் பராக்கிரமபாகு மன்னன் 'வானில் இருந்து விழும் ஒரு துளி நீரையும் விவசாயத்துக்குப் பயன்படுத்தாது வீணே கடலை சென்றடைய விடமாட்டேன்' என்பதை உயர் இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டமையைக் குறிப்பிடலாம். இன்னும் ஏராளமான மன்னர்கள் அணைகளையும் குளங்களையும் பிரமாண்டமாகக் கட்டியுள்ளனர்.

இயற்கை தந்த அருங்கொடையான நீர் வளம் மனிதனின் தவறான செயற்பாடுகள் காரணமாக பெருமளவு மாசடைகின்றது. இதன் காரணமாக மனிதன் மாத்திரம் அன்றி உலகில் உள்ள அனைத்து உயிரிகளும் பாதிக்கப்படுகின்றன.

புவியில் நாம் மாத்திரம் வாழ்ந்தால் போதாது, அடுத்துவரும் சந்ததியினரும் ஆரோக்கியமாக வாழ எமது செயற்பாட்டை உரிய ஒழுங்கு முறையில் பின்பற்ற வேண்டும்.

### நீர் மாசுறும் சந்தர்ப்பங்கள்

1. தொழிற்சாலைக் கழிவுகள் நீர்நிலைகளைச் சென்றடைதல்.
2. விவசாய நடவடிக்கைகளின் போது சிபார்சு செய்யப்பட்ட அளவிலும் பார்க்க அதிகளவில் அசேதன வளமாக்கிகள், கிருமிநாசினிகளைப் பயன்படுத்தல்.
3. முறையற்ற விதத்தில் அப்புறப்படுத்தப்படும் இலத்திரனியல் பொருள்கள்.
4. குப்பை கூளங்களை நீர்நிலைகளில் கொட்டுதல்.
5. கடல் கப்பல் விபத்துக்கள், குறிப்பாக எண்ணெய்க்கப்பல் விபத்து.
6. நகராக்கம்.
7. கண்டல் தாவரம், முருகைக்கற்பாறை அகற்றல்.
8. அணுக்கழிவுகள் நீர்நிலைகளைச் சென்றடைதல்.
9. எண்ணெய்க் கழிவு.
10. உயிர்க்கழிவுகள் (மலம், சலம்) நீர்நிலைகளைச் சென்றடைதல்.

ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

### விளைவுகள்

நீர் மாசடைவதனால் பல்வேறுபட்ட பாதிப்புக்கள் ஏற்படுகின்றது. அந்தவகையில் நீர் மாசடைவதனால், கொலரா, நெருப்புக் காய்ச்சல், வயிற்றுளைவு, சரும நோய்கள்,' சிறுநீரகம் சம்பந்தப்பட்ட பல்வேறு நோய்கள், புற்றுநோய் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன.

அத்துடன், நீர்வாழ் உயிர்ப்பல்வகைமை பாதிப்படைதல், பயிர்ச்செய்கை நடவடிக்கையில் பல்வேறு பாதிப்புக்கள், நற்போசணையாக்கம் என்பன ஏற்படவும் வாய்ப்பாக அமைகின்றது.

எனவே இவ்வாறான பாதிப்புக்களில் இருந்து பாதுகாப்புப் பெற்றுக்கொள்ளும் வகையில் அனைத்து உயிர்களுக்கும் சொந்தமாகக் காணப்படும் நீரினை அதன் பெறுமதியை உணர்ந்து அடுத்து வரும் சந்ததியினரும் ஆரோக்கியமாக வாழ இத்தினத்தில் இருந்தே உறுதி பூண்டு செயற்படுவோம்.

# மலேசியாவுடன் உறவு இல்லை!

## வடகொரியா அதிரடி முடிவு



**பியாங்யாங், மார்ச் 22**

**வடகொரியாவுக்கு எதிராக துரோகமான செயலை மலேசியா செய்துள்ளது. இதனால் அந்த நாட்டுடனான உறவை முறித்துக் கொள்கின்றோம் என்று வடகொரியா நேற்றுமுன்தினம் திட்டவட்டமாக அறிவித்தது.**

வடகொரிய அதிபரின் சகோதரர் மலேசிய விமான நிலையத்தில் கொல்லப்பட்டதன் பின்னர் வடகொரியாவுக்கும் மலேசியாவுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது.

இந்தக் கொலையை வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்தான் செய்திருக்கலாம் என்று மலேசியாவும் அமெரிக்காவும் சந்தேகிக்கின்றன.

இந்த நிலையில் பண மோசடி வழக்கில் வடகொரியர் ஒருவரை அமெரிக்காவுக்கு நாடுகடத்த மலேசியா சம்மதித்துள்ளது. இதையடுத்தே மலேசியாவுடனான உறவை துண்டிக்கிறோம் என்று வடகொரியா அறிவித்துள்ளது.

'மலேசியாவால் ஒரு வடகொரியருக்குப் பாதுகாப்புக் கொடுக்க முடியவில்லை. எங்கள் நாட்டின் முதன்மை எதிரியுடன் இணைந்து மலேசியா சதியில் ஈடுபடுகின்றது. இதற்குரிய விலையை மலேசியாவும் அமெரிக்காவும் கொடுக்கும்' என்றும் வடகொரியா அறிவித்துள்ளது. முன்னதாக, 'அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு நிம்மதியாக உறங்க வேண்டுமாயின் வடகொரியாவுவை அமெரிக்கா பகைக்காமல் இருப்பதே சிறந்தது' என்று கிம் ஜோங் உன்னின் தங்கை தெரிவித்திருக்கமை குறிப்பிடத்தக்கது. (ம)



# மகிழ்ச்சியான நாடு பின்லாந்து: இலங்கைக்கு 129ஆவது இடம்


லண்டன், மார்ச் 22

உலகில் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ளது. இதில் தொடர்ச்சியாக 4ஆவது ஆண்டாக பின்லாந்து முதலிடத்தைப் பிடித்தது. இலங்கை 129ஆவது இடத்தில் உள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையால் வருடாவருடம் இந்தப் பட்டியல் வெளியிடப்படுகின்றது. இந்த வருடத்துக்கான பட்டியலில் முதல் பத்து இடங்களில் முறையே பின்லாந்து, டென்மார்க், சுவிஸ்லாந்து, ஐஸ்லாந்து, நெதர்லாந்து, நோர்வே, சுவீடன், லக்ஸம்பேர்க், நியூசிலாந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் உள்ளன.

ஆசியாவைப் பொறுத்த வரையில் சீனா 84ஆவது இடத்தில் உள்ளது. அதைவிட பங்களாதேஷ் 101ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 105ஆவது இடத்திலும், இலங்கை 129ஆவது இடத்திலும், இந்தியா 139ஆவது இடத்திலும் ஆப்கானிஸ்தான் 149ஆவது இடத்திலும் உள்ளன.

தலிபன்களுடனான உள்நாட்டுப் போரை சந்தித்துள்ள ஆப்கானிஸ்தான் கடந்த சில வருடங்களாக இந்தப் பட்டியலில் தொடர்ச்சியாக இறுதி இடத்துக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)



இராணுவத்துக்கு எதிராகப் போராடிய

# 260 அப்பாவிப் பொதுமக்கள் மியான்மரில் சுட்டுக்கொலை!

நைபிட்டோ, மார்ச் 22

மியான்மரில் இராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராடிய 260 அப்பாவிப் பொதுமக்கள் அந்த நாட்டு இராணுவத்தால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டனர் என்று சர்வதேச ஊடகங்கள் பல அறிக்கையிட்டுள்ளன. மியான்மரில் ஆங் சான் சூச்சியின் ஆட்சியை துப்பாக்கி முனையில் அகற்றி இராணுவ ஆட்சியை அறிவித்துள்ளது அந்த நாட்டு இராணுவம். இதையடுத்து இராணுவ ஆட்சிக்கு எதிராக மியான்மரில் பல இடங்களில் போராட்டங்கள், கலவரங்கள் வெடித்துள்ளன. அவற்றை அடக்குவதற்காக மியான்மர் இராணுவம் துப்பாக்கிச் சூட்டையும் இன்னபல அத்துமீறல்களையும் நிகழ்த்தியுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இந்த அத்துமீறல்களால் இதுவரை (நேற்றுமுன்தினம்) 260 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். எனினும் பல இடங்களில் போராட்டம் மேலும் தீவிரம் பெற்றுள்ளது என்றே தெரிவிக்கப்பட்டுள் ளது. (ம)

# சீனத் தடுப்பூசி சீனருக்கு மட்டும்

கொழும்பு,மார்ச் 22

சீனாவில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள சினோபாம் கொரோனாத் தடுப்பூசி, இலங்கையில் உள்ள சீனப் பிரஜைகளுக்கு செலுத்துவதற்கே அனுமதி வழங்கப் பட்டுள்ளது என்று தேசிய ஔடத ஒழுங்குமுறை அதி கார சபை தெரி வித்துள்ளது.

இலங்கை மக்களுக்கு குறித்த தடுப்பூசியைச் செலுத் துவது தொடர்பில், இதுவரையில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படவில்லை என்று அதிகார சபையின் தலைவர் மருத்துவ நிபுணர் கமல் ஜயசிங்க தெரிவித் துள்ளார்.

இதற்காக விசேட குழு ஆராய்ந்து வருகின்றது. 6 லட்சம் சினோபாம் கொரோனாத் தடுப்பூசிகள் நன் கொடையாக இலங்கைக்குக் கிடைக்கவுள்ளன. அவற் றைக் கொண்டு வருவதற்கு, தேசிய ஔடத ஒழுங்கு முறை அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளது என் றும் அவர் தெரிவித்தார். (கு-இ)

## சாரதியின் குருதி பரிசோதனைக்கு

பதுளை,மார்ச் 22

பதுளை-லுணுகல வீதியில் இடம்பெற்ற பஸ் விபத் தின்போது, பஸ்ஸின் சாரதி போதையூட்டும் பொருள் அல்லது மதுபானம் அருந்தியிருந்தாரா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்க ப்பட்டுள்ளன. அதற்கான அவரிடமிருந்து சிறுநீர் மற்றும் குருதி மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள் ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித் தார். (கு-இ)

## மரண அறிவித்தல்



பிறப்பு
19 - 12 - 1944

இறப்பு
21 - 03 - 2021

### பரமசாமி இரத்தினபூபதி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் குமரகோட்டம் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி இரத்தினபூபதி அவர்கள் 21.03.2021 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பா தங்கச்சியம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வல்லிபுரம் பரமசாமி அவர்களின் அன்பு மனைவியும், தவமணி செல்வரத்தினம், இராசலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சாந்தகுமார் (சுவிஸ்), தபோநிதி (சுவிஸ்), தயாநிதி (சுவிஸ்), தவநிதி (சுவிஸ்), பவநிதி (சுவிஸ்), சதீஸ்குமார் (சுவிஸ்), தர்மநிதி (இலங்கை), சபேஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2021) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குமரகோட்டம்**
**கோண்டாவில் மத்தி,**
**மேற்கு கோண்டாவில்.**

**தகவல்**
**திருமதி. தயாபரன் தர்மநிதி**
**(மகள்)**

# பசறை விபத்து ஆளுநர் ஆராய்வு



பசறை - லுணுகலை பிர தான வீதி 13 ஆம் கட்டை பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்து தொடர்பில், ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே.எம். முஸம்மில் நேரடி யாகச் சென்று ஆராய்ந்தார். விபத்து இடம்பெற்ற இடத்துக் குச் சென்ற ஆளுநர், தற் போதைய நிலவரங்கள் தொடர்பில் கேட்டறிந்தார். விபத்து தொடர்பில் விசாரணை களை முன்னெடுக்குமாறு பொலிஸாருக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட் டுள்ள பசறை மற்றும் பதுளை மருத்து வமனைகளுக்கும் சென்றார்.

விபத்தில் காயமடைந் தவர்களுக்கு சிகிச் சைக்குத் தேவை யான வசதிகளைச் செய்து கொடுக்குமா றும் மருத்துவமனை அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார். (கு-இ)

## துயர் பகிர்கின்றோம்


சங்க உறுப்பினர் ச. துளசிகரன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

### சிவஞானம் சந்திரசேகரம்

அவர்கள் 20.02.2021 அன்று இறைபதமடைந்தார்.
அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கம்
தென்மராட்சி, சாவகச்சேரி

## மரண அறிவித்தல்



### கந்தசாமி கணேசராசா (கணேஸ்)

**(கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் பணியாளர்)**

உமையாள்புரம் பரந்தனைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி கணேசராசா (கணேஸ்- கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க முன்னாள் பணியாளர்) 20.03.2021 அன்று அகால மரணமானார்.

அன்னார் கந்தசாமி கிருஸ்ணம்மா தம்பதிகளின் அன்பு மகனும், வரப்பிரசிங்கம் செல்லக்கிளி தம்பதிகளின் அன்பு மருமகனும், சந்திராணியின் அன்புக் கணவரும், சுவஸ்திகாவின் (மாணவி, கிளி/பரந்தன் இந்து மகாவித்தியாலயம்), அன்புத் தந்தையும், கணேசமூர்த்தி (கோபி-பிரான்ஸ்), பிறேம்நாத் (பிறேம்-பரந்தன்), சுமித்திரா (சித்திரா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சந்திரமோகன் (புத்தூர்), சந்திரபவான் (வரணி), சந்திரவாணி (அராலி), சிவந்தினி (ராதா-வவுனியா) ஆகியோரின் மைத்துனரும், சரண்யா,கஜநிதன், பிருத்திகா ஆகியோரின் பெரியதந்தையும், றஞ்சிகா, பிருந்துயன், கஜீவன், மதுமிதா, லிசன்யா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோரக்கன்கட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்;**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



பிறப்பு
10 . 08 . 1927

இறப்பு
21 . 03 . 2021

### அருளம்பலம் விசாலாட்சி

மண்கும்பான் 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை பொன்னம்மாவின் அன்பு மகள் அருளம்பலம் விசாலாட்சி அவர்கள் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், கந்தையா நாகம்மாவின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், பூரணம், தங்கம்மா, புள்ளைமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், பூமணி, பிரான்சிஸ், காலஞ்சென்றவர்களான கைலாசப்பிள்ளை, கனகசபை, முத்தையாவின் (ராசம்மா) அன்பு மைத்துனியும், கிருஸ்ணபிள்ளை, பரமானந்தம், ஆனந்தசிவம், யோகேஸ்வரி, உதயகுமாரி, விஜயஸ்ரீ ஆகியோரின் அன்புத் தாயும், தவமணி, காந்திமதி, மங்களகௌரி, சுதாகரன், கணேசமூர்த்தி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருபாலினி (பிரான்ஸ்), (அமரர்) கிருபானந்தராசா, தவபாலினி (பிரான்ஸ்), சிவானந்தன், யோகானந்தன், பவியா, காண்டீபன், ராஜேஸ், நிரோசன், நிஷானந்தன் (பிரான்ஸ்), விமலானந்தன் (பிரான்ஸ்), துர்க்கா, துஷியந்தன் (பிரான்ஸ்), விணோதிகா, அஜந்தன், கஜேந்தினி, கஸ்தூரி, விஜயபாலன், நிரோஜன் (வேலன் ஜுவல்லறி), உஷாயினி, லாவண்யா, (அமரர்) கீர்த்தனன், அனுசியா, மணிவண்ணன் (பிரான்ஸ்), தவராஸ் (விது ஸ்ரோர்ஸ், கொழும்பு), ஜீவிதா, கனிஸ்ரா, கிருஷாந்தினி, ரம்யா, கயாந்தன், கிருஸ்ணகுமார், சபேசன், விணோதினி, அன்பழகன், கோபிநாத், விணோகாந்த் (பிரான்ஸ்), ஆகியோரின் பேர்த்தியும், துவாரகன், துவாரகை, துளசிகா, பவித்திரன், விதுர்சா, சந்தோஷ், லதுசன், லதுஸ்கா, சர்விஸ், இந்துசியா, நவசாத், தசானா, சானுகா, சாகித்தியன், அர்ச்சனா, அபிசாந், அகலியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2021) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணிக்கு சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


## காணாமல் போன மாணவன் மீட்பு

கொழும்பு,மார்ச் 22

கடந்த 18 ஆம் திகதி காணாமல் போன மாணவன், நேற்றுமுன்தினம் இரவு மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பம்பலப்பிட்டி புனித பீட்டர்ஸ் கல்லூரியில் கல்வி பயிலும், இரத்மலானை தஹம் மாவத்தையில் வசிக்கும் எல்டன் டெவொன் கெனி என்ற 16 வயதுடைய மாணவனே காணாமல் போயிருந்தார். காணாமல் போன மாணவனை 4 பொலிஸ் குழுவினர் தேடினர். குறித்த மாணவன் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் மீட்கப்பட்டார். "தனிமையில் இருக்க வேண்டும் என்பதால், வீட்டை விட்டுச் சென்றேன். வீட்டுக்கருகிலேயே இத்தனை நாள்களும் தங்கியிருந்தேன்" என்று மாணவன் தெரிவித்துள்ளார். (க-இ)

## நீங்கா நினைவுகள்

**37ஆம் ஆண்டு**



தோற்றம் 24.11.1933 மறைவு 12.01.1984

**அமரர்**
**குருநாதர் சின்னத்துரை**
(முன்னாள் கிராம சேவை அலுவலர் தென்மராட்சி பிரதேச செயலகம்)


**04ஆம் ஆண்டு**



தோற்றம் 10.10.1943 மறைவு 05.04.2017

**அமரர்**
**சின்னத்துரை பூமணி**

**14ஆம் ஆண்டு**



தோற்றம் 10.02.1975 மறைவு 08.03.2007

**அமரர்**
**சின்னத்துரை சிவசுதன்**
(B.A(Hons), முன்னாள் ஆசிரியர் வரணி மகா வித்தியாலயம்)

*இப்புவியில் நெறிதவறாது ஒருகோட்டில்
என்றும் ஒன்றாய் இணைந்து நாம் பயணிக்க
நற்பண்போடு அறிவூட்டி ஆற்றல் மிக்கவராய்
வளர்த்த எம் தந்தையே....*

*இளம் வயதினில் தந்தையை இழந்து
வலி சுமந்து இடர்பட்ட போதும்
வாழ்வுடனே போராடி
எம் ஏழ்வரையும் அன்புடனே அரவணைத்து
வையத்தில் நாம் தலைநிமிர்ந்து வாழ
வழி சமைத்த எம் அன்பு அம்மாவே.....*

*ஒரு கூட்டுக் கிளியாக எழுவரில் ஒருவராய் உதித்து
உற்றார் உறவோடு இன்பதுன்பத்தில் ஒன்றாய் கூடி
சோதனை யாவும் சாதனையாக்கி
சோதி வடிவாகிய எம் சோதரனே...*

*ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும்
உமைப் போல பெற்றோர் சோதரனை
எம்மால் இனிக் காணமுடியாதே
ஓராயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
எம் நெஞ்சம் என்றும் உமை மறக்காதே....
எம் கண்ணீரை காணிக்கையாக்கி உம் ஆன்மா
சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.*

**இல.71, கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்**

**குடும்பத்தினர்.
கைதடி வடக்கு, கைதடி.**

## வாடகைக்கு

சுன்னாகம் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள 2ம் மாடிக் கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு

தொடர்பு 077 398 5120

## வேலைக்கு ஆட்கள் தேவை

20-25 வயதுக்குட்பட்டோர் தொடர்புகொள்ளவும்.

**புளு பெரி கிறீம் ஹவுஸ்
BLU BERRY CREAM HOUSE
சிலையடி
சாவகச்சேரி வீதி, மந்திகை.
தொடர்பு: 077 588 0437**

சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

## தவறிவிட்டது

மனோகரன் லக்ஸ்சன் என்பவருடைய தேசிய அடையாளஅட்டை (883402138V), சாரதி அனுமதிப்பத்திரம், வரி, காப்புறுதிப்பத்திரம் என்பன 21.03.2021 நேற்றைய தினம் பண்டத்தரிப்புக்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பேசி :
0770033800, 076 591 1748

## மணமகள் தேவை

கௌரவ இந்து 1991 உத்தராட நட்சத்திரம் B.sc severing Science பட்டம் பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் மணமகனிற்கு வங்கி மற்றும் அரச நிறுவனங்களில் பணிபுரியும் நல் ஒழுக்க முள்ள பொருத்தமான மணமகளை பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர்.

0774611708 / 0774211094

## மரண அறிவித்தல்

தோற்றம் 08 - 04 - 1933



மறைவு 21 - 03 - 2021

### திருமதி நடேசன் ஆச்சாரி திரவியலட்சுமி

கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும் சங்குவேலி மற்றும் கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடேசன் ஆச்சாரி திரவியலட்சுமி 21.03.2021 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா பத்தர் நாகம்மா தம்பதிகளின் (கொக்குவில் கிழக்கு) மூத்தமகளும் மகாதேவா லீலாவின் சம்பந்தியும் (கொக்குவில் மேற்கு) காலஞ்சென்ற நடசேன் ஆச்சாரியாரின் (சங்குவேலி) அன்பு மனைவியும், காலஞ் சென்ற தர்மகிட்ணர்,யோகேஸ்வரி, தேவராணி (ராணி) மற்றும் சறோஜாதேவி ஆகியோரின் சகோதரியும், தர்மபாலா (விஸ்கர்மா- சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர், யாழ்ப்பாணம்) அவர்களின் தாயாரும் சாந்தினி அவர்களின் மாமியாரும் பிரனீத்தா, பிரணவன், கேதாரணி அவர்களின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மானிப்பாய் வீதி, கோம்பயன் இன்பம் அந்தியகால சேவை நிலையத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (22.03.2021) திங்கட்கிழமை இறுதிக்கிரியைகள் இடம்பெற்று பிற்பகல் 2.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தர்மபாலா (மகன்)
077 631 4702**

**தகவல் :
குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 08 . 1941



மறைவு 19 . 03 . 2021

### திரு.கதிரவேலு திருச்சிற்றம்பலம்

காரைநகர் கள்ளித்தெரு தங்கோடையைப் பிறப்பிடமாகவும் கூமாங்குளம், வவுனியா, அரசடி யாழ்ப்பாணத்தை வதிவிடங்களாகவும் கொண்ட கதிரவேலு திருச்சிற்றம்பலம் அவர்கள் கடந்த (19.03. 2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஆறுமுகம் வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகனும், ஓம்சக்தியின் அன்புக் கணவரும், சிவமாலினி, சிவசங்கர், உமா சங்கரின் பாசமிகு தந்தையும், விஷ்ணு அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தில்லைநடராசா, சங்கரபிள்ளை, திலகவதி, தியாகராசா, சிவஞானம், உமாதேவி மற்றும் பத்மாவதி (கனடா), லோகநாயகிஅம்மாள் (பாலா-கனடா) ஆகியோரது அன்புச் சகோதரனும், தியா, ஹரி ஆகியோரது பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**65A, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
மனைவி, மக்கள், மருமகன்.
077 94 66 155**

# மணி விழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியில்
மணி விழாக் காணும் எங்கள் ஆசிரியை

## திருமதி ரோகினி பரம்சோதி

(SLTS - I, BA, (Spi), PGDE )

எமது கல்லூரியில் 11.02.2015 தொடக்கம் 06 வருடங்கள் தன் பணியில் சிறந்த நல்லாசிரியராக பணியாற்றி 22.03.2021 அன்று சேவையிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு அவரின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக்காலம் மேலும் சிறப்புற மனமுவந்து வாழ்த்துகின்றோம்

**சேவை விவரம்**

| | | |
|---|---|---|
| 1. | கிளி / கிளிநொச்சி இந்து ம.வி | 27.02.1986 - 11.10.1989 |
| 2. | கிளி / ஆனையிறவு அ.த.க. பாடசாலை | 12.10.1989 - 14.01.1991 |
| 3. | கிளி / பரந்தன் இந்து ம.வி | 15.01.1991 - 01.09.1991 |
| 4. | கிளி / முரசுமோட்டை முருகானந்தா ம.வி | 02.09.1991 - 12.01.1992 |
| 5. | கிளி / பரந்தன் இந்து ம.வி | 13.01.1992 - 09.06.1992 |
| 6. | யா / மீசாலை வீரசிங்கம் ம.வி | 10.06.1992 - 10.02.2015 |
| 7 | யா / கொடிகாமம் திருநாவுக்கரசு ம.க | 11.02.2015 - 22.03.2021 |

வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணக வாழ்வில் 16 . 10 . 1934



விண்ணக வாழ்வில் 02 . 04 . 2020

## அமரர் திரு.செ.சின்னையா (பாலசிங்கம்)

(குருந்தடிப்பிள்ளையார் ஆலய உரிமையாளர், முன்னாள் தலைவர்)

ஆண்டொன்று ஓடி மறைந்ததையா
ஆனாலும் ஆறவில்லை என் நெஞ்சம்
ஆற்றுவாரும் இல்லை என்னைத்
தேற்றுவாரும் இல்லை ஐயா என்னைத்
தனியே தவிக்கவிட்டு நீங்கள்
தனிவழியே போனதென்ன?
கண்ணீர் விட்டு என்னாளும்
கலங்கி நிற்கின்றேனே என் உயிரே.
அப்பா, தாத்தா, அப்பப்பா என்று நாங்கள் வந்த பொழுதெல்லாம்
கட்டி முத்தம் தந்து அணைப்பீர்களே
உங்கள் கையாலே அழகழகான விளையாட்டுப் பொருட்கள்
செய்து தந்து மகிழ்விப்பீர்களே.
இன்று எல்லோரையும், எல்லாவற்றையும் மறந்து விட்டீர்களா?
குட்டிக் குட்டிக் கும்பிட்டுக் கும்பிட்டுக் குருந்தடியான்
பாதம் சேர்ந்துவிட்டீர்களே.
என்றும் எங்கள் நெஞ்சங்களில் நிறைந்து நிற்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம்சாந்தி!

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

குருந்தடிப் பிள்ளையார் கோவிலடி,
சுதுமலை தெற்கு.


# யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

புத்தாண்டு விசேட தள்ளுபடி

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

# இந்தியன் செலக்ஷனின்

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்



கொட்டன் Top, டெனிம் Top,
மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள்,
பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள்,
சில்க் சாறிகள், சேட், T –சேட், ரவுசர்
வகைகள், பார்ட்டி புறொக்ஸ் என இன்னும்
ஏராளமான ஆடைத் தெரிவுகள்.

அனைத்து வாடிக்கையாளர்களும் சுகாதார
நடைமுறைகளை பேணவேண்டும்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்



இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
காலம் : 20.03.2021 - 13.04.2021 வரை

(10)

## மரண அறிவித்தல்

தோற்றம் 21 - 10 - 1948

மறைவு 20 - 03 - 2021



### சீவரத்தினம் சரஸ்வதி

அம்மன் வீதி கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும்,வசிப்பிடமாகவும் கொண்ட சீவரத்தினம் சரஸ்வதி அவர்கள் 20.03.2021 சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துவேலு லட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும் சீவரத்தினம் (ஓய்வு நிலை பொலிஸ் அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், சிறிதரன், விக்கினேஸ்வரன், நிர்மலா, விமலேஸ்வரன், கங்காதரன், ஆகியோரின் அன்புத் தாயாரும் சர்மிளா, சுதர்சினி, புஸ்பேந்திரன், மேனகா, செரின் பற்றீசியா அவர்களின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2021) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக கோம்பயமணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**42/6 அம்மன் வீதி,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**சிறிதரன் (மகன்)**
**076 855 6300**

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு

தோற்றம் 18 . 08 . 2014

மறைவு 20 . 02 . 2021



### அமரர் பாலஜீவன் அட்சரன்

கடந்த 20.02.2021 அன்று இறைபதம் எய்திய எமது அன்பு மகன் எமது வாழ்விற்கு வளம் பல சேர்த்து இறைபதம் அடைந்த பாலஜீவன் அட்சரன் அவர்களின் பிரிவு கேட்டு ஓடோடி வந்து உதவிபுரிந்தோர். அனுதாபம் தெரிவித்தோர் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர், இறுதி அஞ்சலி மற்றும் ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் மலர் வளையம் வைத்தோர், எமக்கு ஆறுதல் வார்த்தைகளை நேராகவும் தொலைபேசி ஊடாகவும் கூறியோருக்கும், யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை 12ம் விடுதி குழந்தை வைத்திய நிபுணர் Dr. சரவணபவாநந்தன் அவர்களுக்கும் விடுதி வைத்தியர்கள், தாதியர் மற்றும் ஊழியர்களுக்கும், யாழ் வண்ணார் பண்ணை கெங்காதரன் வைத்தியசாலை, தாதியர், உத்தியோகத்தர்களுக்கும், மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை தாதியர் உத்தியோகத்தர்களுக்கும், கொழும்பு பொரளை சீமாட்டி வைத்தியசாலை 25ம் விடுதி வைத்தியர், தாதியர் ஊழியர், உத்தியோகத்தர்களுக்கும், எமது மகனுக்கு இயன் மருத்துவ சிகிச்சை அளித்த உத்தியோகத்தர்களுக்கும் வாகன போக்குவரத்து வசதி வழங்கியோருக்கும் உணவு, சிற்றுண்டி வழங்கியோருக்கும் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகள் கூறி யாருக்காவது நன்றி கூற தவறி இருப்பின், அவர்களுக்கும் சிரம் தாழ்த்தி இரு கை கூப்பி உள்ளம் கனிந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**தாய் பாலஜீவன் ராதிகா**
**யா/ சுழியுரம் விக்ரோரியா கல்லூரி**

**தந்தை : செ.பாலஜீவன்,**
**வெஸ்டன் பார்மசி,**
**சங்கானை**

## மரண அறிவித்தல்



### திருமதி பத்மாவதி துரைராஜா

(இளைப்பாறிய ஆசிரியை யாழ் இந்து மகளீர் கல்லூரி)

நவாலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, கந்தர்மடம் இல. 49, பலாலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி துரைராஜா (இளைப்பாறிய ஆசிரியை யாழ். இந்து மகளீர் கல்லூரி) 20.03.2021 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேந்திரா - பொன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற விஸ்வநாதன் பவளம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற துரைராஜா (இளைப்பாறிய பணிப்பாளர் கடற்தொழில் அமைச்சு) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற Dr. திவாகரன், சுதர்சனா (உதவி திட்டமிடல் பணிப்பாளர் பிரதேச செயலகம், கோப்பாய்), துவாரகன் (Mintra Accounting & Consultancy Colombo) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - சிவபாக்கியம், சத்தியபாமா அவர்களின் அன்பு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2021) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மாயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**49, பலாலி வீதி**
**கந்தர்மடம்**
**யாழ்ப்பாணம்**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 737 4726**
**077 350 6217**

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 - 11 - 1942

மறைவு 21 - 03 - 2021



### செல்வஸ்ரீ மலர்நாயகி

கொழும்பை பிறப்பிடமாகவும், காங்கேசன்துறையை நிரந்தர வசிப்பிடமாகவும், கோண்டாவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வஸ்ரீ மலர்நாயகி அவர்கள் 21.03.2021 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி (பொலிஸ் அதிகாரி) அழகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்வஸ்ரீ (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிகாரி)அவர்களின் அன்பு மனைவியும் சுமதி, காலஞ்சென்றவர்களான சண்முகராஜா, மகேந்திரன், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற ஸ்ரீதரன், ஸ்ரீதர், காலஞ்சென்ற ஸ்ரீதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், புவனேஸ்வரி, சசிலதாவின் அன்பு மாமியும், ஆனந்தராஜா, தவநிதி, சரஸ்வதியின் அன்பு மைத்துனியும், பிரசாந், சந்தோஷின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2021) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் சுதுமலையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**யாமா வீதி,**
**சுதுமலை வடக்கு,**
**மானிப்பாய்**

**தகவல்;**
**ஸ்ரீதர் (ரமேஸ் - மகன்)**
**075 049 2044**

## இலங்கைக்கெதிரான...

பிரிட்டன் தலைமையிலான 6 நாடுகள் இணைந்து முன்வைத்துள்ள இலங்கை தொடர்பான தீர்மான வரைவு தொடர்பில் திருத்தங்களை முன்வைப்பதற்கான கால அவகாசம் கடந்த செவ்வாய்க்கிழமைவரை வழங்கப்பட்டிருந்தது.

இலங்கை தொடர்பான பிரேரணைக்கு சுமார் 40 நாடுகள் இணை அனுசரணையாளர்களாக கையெழுத்திட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை மேற்குலக நாடுகளாகும். இந்த விடயத்தில் இலங்கைக்கு தெற்காசிய நாடுகள் ஆதரவளிக்கலாம் என்று கருதப்படும் நிலையில், பாகிஸ்தான் இலங்கையின் வெளிப்படையான ஆதரவாளராக இருந்து வருகின்றது.

அதேநேரம் ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான் மற்றும் அமெரிக்காவை உள்ளிடக்கிய 'குவாட்' கூட்டணியால் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது என்று இராஜதந்திர தகவல்கள் வெளியாகியுள்ளன.

உலகில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்குக்கு எதிரான குவாட் நாடுகளின் சுதந்திர, திறந்த இந்தோ பசுபிக் கொள்கைக்கு சார்பான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்று இலங்கை மீது அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது என்று தென்னிலங்கை ஊடகங்கள் தெரிவிக்கின்றன. எனினும், அயல் நாடான இந்தியா, இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கும் என்று அரச தரப்பினர் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

ஆனால், தமிழர் தீர்வு விடயத்தில் அதிக சிரத்தை கொண்ட இந்தியா, இலங்கையை எதிர்த்துப் பிரேரணைக்கு ஆதரவாகவே வாக்களிக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். அதே நேரம் பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது இந்தியா நடுநிலை வகிக்கும் என்று புதுடில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன. பிரேரணை வாக்கெடுப்பு தொடர்பில் இந்திய மத்திய அரசு இன்னும் உத்தியோகபூர்வமான தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ.5,22)

## ஐ.நா. தீர்மான...

மற்றும் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ ஆகியோர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

**வைகோ**

இலங்கையில் இனப்படுகொலை நடத்திய கொலைகார ராஜபக்ச கூட்டத்தை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டிக்க வேண்டும் என்று தமிழினம் தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் விவாதத்துக்கு வரவுள்ளது. இந்தத் தீர்மானத்தை பிரிட்டன், கனடா, ஜேர்மனி, வடக்கு மாசிடோனியா, மலாவி மற்றும் மொண்டினிக்ரோ உள்ளிட்ட ஆறு நாடுகள் முன்மொழிந்துள்ளன. இந்தத் தீர்மானம் இலங்கை அரசை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரிப்பதற்கான வகையில் இல்லை.

எனினும், இலங்கையின் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறல் ஆகியவற்றுக்கு எதிரான ஒரு முன்னெடுப்பு இது ஆகும். இந்த அரைகுறைத் தீர்மானத்தைக்கூட இந்தியா ஆதரிக்கப் போவதில்லை என்ற செய்திகள் தமிழர்கள் நெஞ்சில் நெருப்பை அள்ளிக் கொட்டுகின்றன.

இலங்கை வெளிவிகார அமைச்சின் செயலர் ஜெயநாத் கெலம்பகே, இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்காது. இலங்கை அரசைத்தான் ஆதரிக்கப்போகிறோம் என்று கூறினார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள எட்டுக்கோடி தமிழர்களின் இதயக் குமுறலை அலட்சியப்படுத்திவிட்டு, தமிழினத்துக்குத் துரோகம் இழைக்கும் மத்திய பா.ஜ.க. அரசின் செயல் வன்மையான கண்டனத்துக்கு உரியது. இதை தமிழர்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள்- என்றார்.

**மு.க.ஸ்டாலின்**

ஐ.நா. மனித உரிமைகள் சபை தொடர்பில் இந்தியப் பிரதமர் மோடி மௌனமாக இருப்பது தமிழகத்துக்குப் பேரதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளது. இலங்கை அரசை ஆதரிக்கும் வகையில் இந்தியாவின் நிலைப்பாடு அமையும் என்ற தகவல் மேலும் கவலையைத் தருகின்றது. இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட் டுள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டுமே தவிர அதை எதிர்க்கவோ, நடுநிலை வகிக்கவோ கூடாது என்று வலியுறுத்தியுள்ளார். (ஓ.ஐ)

## கச்சதீவு...

இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எக்காரணம் கொண்டும் இந்தத் தீவை இந்தியாவுக்குத் தாரைவார்க்க மாட்டோம். இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இந்தியாவின் மத்திய கப்பல் மற்றும் தரைவழிப் போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் வி.கே.சிங், கச்சதீவை இலங்கையிடமிருந்து மீளப்பெறுவது தொடர்பில் ஆலோசித்து வருகின்றோம் என்று அண்மையில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கேட்டபோதே அமைச்சர் விமல் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அன்று இந்தியாவின் ஓர் அங்கமாக இருந்த கச்சதீவை, இந்திய மத்திய அரசு, ஒப்பந்தம் மூலம் இலங்கைக்கு முழுமையாக வழங்கிவிட்டது. இந்த நிலையில், இன்று இந்திய அரசியல்வாதிகள் கச்சதீவை உரிமை கோருவதை நினைக்கும்போது வேடிக்கையாகவுள்ளது. ஒப்பந்தத்தின்படி கச்சதீவிலுள்ள அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் இரு நாட்டு மக்களும் ஒவ்வொரு வருடமும் கலந்துகொள்வார்கள். தமிழக மீனவர்களும் இந்தத் தீவில் தங்கித் திரும்பு வார்கள். அதற்காக இலங்கையின் சொத்தான கச்சதீவை இந்தியாவுக்கு நாம் தாரைவார்க்கமாட்டோம். தமிழக மீனவர்களையும் எல்லை தாண்டி மீன்பிடிக்க அனுமதி வழங்க மாட்டோம்- என்றார். (ஓ5,22)

## காலம்...

மாகியுள்ளது. அங்கு வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் லுனுகலை, அடாவத்தையைச் சேர்ந்த அந்தோனி நோவா (வயது-32) , பெனடிக் மெடோனா (வயது-31) என்ற தம்பதியினரும் உயிரிழந்துள்ளனர். பதுளை மருத்துவமனைக்குச் செல்லத் திட்டமிட்டிருந்த இவர்கள், வழமையாக பஸ் ஏறும் இடத்தில் பஸ்ஸைத் தவறவிட்டு விட்டனர். அதிலும் அன்றைய தினம் அந்தோனி நோவாவின் பிறந்தநாள்.

அவர்கள் மருத்துவமனைக்குக் கட்டாயம் செல்ல வேண்டும் என்பதால் முச்சக்கரவண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்தித் துரத்திச் சென்று பஸ்ஸில் ஏறியுள்ளனர். அந்த பஸ் பசறை 13ஆம் கட்டைப் பகுதியில் 200 அடிப் பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. பஸ்ஸில் பயணித்த இந்தத் தம்பதியும் உயிரிழந்தனர். இது பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ-இ)

## முன்னறிவிப்பு...

டிக்கைகளை மேற்கொள்வர். நாட்டில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸாரின் தலைமையில் இந்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பில் அமைச்சர் சரத் வீரசேகர தலைமையில் விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது. பொலிஸ் அத்தியட்சகர் உட்பட நாடு முழுவதிலுமுள்ள 40 பொலிஸ் அதிகாரிகள் அதில் கலந்து கொண்டனர். அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை தொடர்பான திகதி அறிவிக்கப்பட்டால் குற்றவாளிகள் தலைமறைவாக வாய்ப்பாகி விடும். அதனால் பகல் மற்றும் இரவு வேளைகளில் விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். நாட்டின் பல பகுதிகளில் குற்றவாளிகள் தலைமறைவாக இருக்கின்றனர் என்று நம்பப்படும் நிலையில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்படுகிறது என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் காடழிப்பு , மிரட்டி பணம் பறித்தல் , போதைப் பொருள் பாவனை மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை உள்ளிட்ட பல்வேறு குற்றங்கள் தொடர்பாக சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-இ)

## ஊடக சுதந்திரம்...

கப்படுமானால் எதேச்சதிகாரம் தலைதூக்கும். அதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் இடமளிக்காது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று தெரிவித்தார்.

ஊடகங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்திருந்தமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

வளர்ச்சியடைந்த சமூகத்தில் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்படும். வளர்ச்சியடையாத சமூகத்தில் ஊடக சுதந்திரம் இருக்காது. எமது நாட்டில் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஜனநாயகமும் வாழும். ஏனெனில் ஊடக சுதந்திரம் இல்லாவிட்டால் எதேச்சதிகாரம் தலைதூக்கிவிடும். ஊடகங்களுக்கு அரசியல்வாதிகளால் கட்டுப்பாடுகளை விதிக்கமுடியாது. ஊடகங்கள் தமக்குத் தாமே ஊடக அறத்தைப் பின்பற்றும் விதத்தில் கட்டுப்பாடுகளை விதித்துக்கொள்ள வேண்டும். உண்மையை மக்களுக்கு தெரியப்படுத்த தெளிவுபடுத்த வேண்டும். ஊடகங்களை ஒடுக்குவதற்கான எந்தவொரு உரிமையும் அரசியல்வாதிகளுக்குக் கிடையாது.

எமது நாட்டில் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டனர், கடத்தப்பட்டனர், காணாமல் ஆக்கப்பட்டனர், வதைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். ஊடகங்களை ஒடுக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் இடமளிக்காது. என்றார். (எ-44)

## பொலிஸாரை...

தால் அங்கு நேற்றுக்காலை பதற்ற நிலைமை ஏற்பட்டது. சம்பவம் நடைபெற்று ஒரு மணி நேரத்துக்குள் தப்பியோடிய இருவரும் கைதுசெய்யப்பட்டனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுமுன்தினம் இரவு குடும்ப உறவினர்கள் இடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது. அந்த முரண்பாட்டில் சைக்கிள் ஒன்றும் சேதமாக்கப்பட்டது. இது தொடர்பாக பொலிஸ் அவசர அழைப்பான 119க்கு அழைப்பெடுத்து முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த முறைப்பாட்டை விசாரணை மேற்கொள்ளச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்களையே சந்தேகநபர்கள் தள்ளிவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

பொலிஸாரைத் தள்ளிவிட்டுத் தப்பியவர்கள் இருவரும் சகோதரர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் நடைபெற்ற ஒரு மணி நேரத்துக்குள் அவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டு விட்டனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-26)

## ஆட்சி...

றமே பிரதான காரணமாகும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றஞ்சாட்டியுள்ளார். சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நல்லாட்சி அரசு நூறு வீதம் திறன் என்று சொல்ல வரவில்லை. ஆனால், அந்த ஆட்சியில் சர்வதேசத் தலையீடுகள் இருக்கவில்லை. சர்வதேசத்துடன் இணைந்து நாடு பயணித்தது. ஆனால், இந்த ஆட்சியில் சர்வதேசத் தலையீடுகள் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளன. ராஜபக்ச அரசின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளே இதற்குக் காரணமாகும். நாட்டிலுள்ள மூவின மக்களையும் அரவணைத்துக்கொண்டு பயணிக்க வேண்டிய அரசு தமிழ், முஸ்லிம் மக்களை வேண்டுமென்றே புறந்தள்ளி வைத்துள்ளது. அவர்களின் மத, கலாசார உரிமைகளில் கைவைத்துள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள்தான் இலங்கை மீதான சர்வதேசத்தின் தலையீடுகளை அதிகரிக்கச் செய்துள்ளன என்றார். (எ-22)

## 'பொ-பொ'..

னிலையாவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. "பொத்துவில் முதல் பொலிகண்டி வரை" பேரணியில் பங்கேற்றவர்கள்மீது பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள "பி" அறிக்கைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரம் கடந்த 5ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள "பி" அறிக்கையின் அடிப்படையில் நீதிமன்றால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று சட்டத்தரணிகள் வாதிட்டனர். சட்டக்கோவையின்படி நடவடிக்கை எடுக்க முடியாது என்கின்ற நிலையில், பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்கு நீதிமன்றம் உடந்தையாகச் செயற்படக் கூடாது என்று சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிமன்று பொலிஸ் தரப்பு விளக்கத்துக்காக வழக்கை இன்றுவரை ஒத்திவைத்தது. இந்த வழக்கு இன்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படும் நிலையில், பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீதிமன்றில் முன்னிலையாவார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-26)

© 2000 Agfa-Gevaert N.V.

நீங்காத நினைவலைகள்

1ஆம் ஆண்டு நினைவு



அமரர் திருமதி
சின்னப்பிள்ளை சரவணமுத்து
(பொன்மணி)

27ஆம் ஆண்டு நினைவு



அமரர் திரு.
கனகர் சரவணமுத்து

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே!
உமையுருக்கி எமை வளர்த்து - இவ்வுலகில்
உயர்வாக வாழ்வதற்கு வழிசமைத்தாய் - எமக்கு
என்றும் மிளிரும் கலங்கரை விளக்கு நீயம்மா!
ஏனம்மா எமைப் பிரிந்தாய்?

அரவணைப்புக்காக ஏங்கித் தவிக்கின்றோம்
ஏழெழு ஜென்மங்கள் எடுத்தாலும் - நாம்
வேண்டும் வரமம்மா - உம்
பிள்ளைகளாக வாழ்வதற்கு

239/1, மணிக்கூட்டு ஒழுங்கை
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

# பெற்றோல் முகர்ந்த சிறுவன் உயிரிழப்பு

மோட்டார் சைக்கிளின் பெற்றோல் தாங்கியின் மூடியைக் கழற்றி பெற்றோல் முகர்ந்த சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தம்புள்ளை வெலமிடியாவ பகுதி யில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

தம்புள்ளை வெலமிடியாவ ஆரம்பப் பள்ளியில் தரம் இரண்டில் கல்வி பயிலும் சஜித் குமார முனசிங்க என்ற 7 வயதுச் சிறுவனே உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுவன் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் ஏறி, மோட்டார் சைக்கிளின் பெற்றோல் தாங்கியின் மூடியை அகற்றி, பெற்றோல் வாசனையை முகர்ந்து பார்த்துள்ளார். இதனால் மயக்கமடைந்த சிறுவனை கலேவெல மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்தனர். (ஐ-இ)

**தேவை**

யாழ் நகரில் இயங்கும் கையடக்க தொலைபேசி நிறு வனத்திற்கு விற்பனையாளர், திருத்துனர் தேவை. வயது 18 - 21 வரை சம்பளம் 20,000/-

தொடர்பு 077 486 9479

**புதிய வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் 3 அறைகளுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்கு.

தொடர்பு: 077 444 9119

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை நவாலி வீதி, மூத்த விநாயகர் கோவிலடி மெயின் றோட்டுடன் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்து கொடுக்கப்படும். 11/2 பரப்பாக. (தரகர் தேவையில்லை)

காணி பார்வையிடும் நேரம் : காலை 9.00 - மாலை 6.00 வரை

குரு
077 468 3354
077 288 0152

# தொல்லியல் அகழ்வை எவ்வாறு கையாள்வது?

## கோவில் நிர்வாகமும் அரசியல் தரப்பினரும் ஆராய்வு

கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் கோவிலில், தொல்லியல் அடையாளம் உள்ளது என்று கூறி தொல்லியல் திணைக்களம் அகழ்வுகளை மேற்கொள்ளவுள்ள நிலையில், இதனை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் கோவில் நிர்வாகத்தினரும் தமிழ் அரசியல் தரப்பினரும் நேற்று கலந்துரையாடினர்.

குறித்த கலந்துரையாடலில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராசா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் பின் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்:

நாங்கள் அனைத்து விடயங்களுக்கும் போராட வேண்டிய நிலையில் உள்ளோம். அரசின் தொல்லியல் ஆய்வாளர்கள் இராணுவத்தினர் மற்றும் பௌத்த பிக்குகள் இங்கு வந்து சென்றுள்ளனர். நாளைய தினம் இப்பகுதியில் அகழ்வுகளில் ஈடுபட உள்ளனர் என்று அறிய முடிகின்றது. இந்த ஆட்சி, எங்களுடைய நிலங்கள் மற்றும் பாரம்பரியங்கள் இருக்கின்ற தெய்வ சந்நிதிகளிலே தங்களது பௌத்த சமயத்தை நிலைநாட்டுவதற்காக தொல்லியல் திணைக்களம் என்னும் குழுவை உருவாக்கி, குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் தங்களது பௌத்த அடையாளங்கள் இருக்கின்றன என கூறி பௌத்த ஆலயங்களை நிலைநாட்டு வதற்காக, தங்களது விருப்பப்படி தனியே பௌத்தத்தை அடிப்படையாகக் கொண்ட குழுவை நியமித்து உள்ளது. இந்த இடத்தை இராணுவத்தினர் பல வருடங்களாக ஆளுகைக்குள் வைத்திருந்தனர். அவர்களே இந்த ஆய்வை மேற்கொள்ள பௌத்த குருமாருடன் ஆர்வமாக உள்ளனர்.

இவற்றைத் தடுப்பதற்கு நாங்கள் சட்ட நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். எம்மிடம் இருக்கும் ஆதாரங்களை வைத்து தடை உத்தர வைப் பெறுவதற்கு முயற்சிக்க வேண்டும். எமது மண்ணை காப்பாற்ற சட்ட நடவடிக்கை மற்றும் போராட்டங்களை நடத்த வேண்டும். என்றார். (த-214)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 36 ... அவர்களது பணிமனையில் 22.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.